ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்

விக்ருதி ௵ — தை ௴

தொகுதி ௩௧ — பகுதி ௧

வருஷ சந்தா:

உள்நாடு: ரூபாய் மூன்று — அயல்நாடு: எட்டு ஷில்லிங்

தனிப்பிரதி: அணா ஆறு

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

சென்னை - 4

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி—௩௧

விக்ருதி௵ தைமீ முதல் கர௵ மார்கழிமீ முடிய

XXXI

1951

பத்திராசிரியர்: சுவாமி பரமாத்மாநந்தர்

பதிப்பாளர்: சுவாமி ஆதிதேவாநந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மைலாப்பூர், சென்னை - 4

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் — சென்னை - 4

பொருளடக்கம்

விஷயம்	பக்கம்
அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்	...18, 43, 71, 101
E. V. சோமசுந்தரம் B.A.	123, 157, 208, 238
ஆசிரியர்க்குரிய ஐம்பெருந் தேவைகள்	... 228
ஆலயவழிபாடு	... 129
நாவலர்	
இந்துமத ஸாரம் (மொழி பெயர்ப்பு)	... 51, 73, 104
ஆசிரியர்	127, 159, 183 215, 274, 293, 325
இயற்கை அழகு	... 128
S. சிவராமன், M.A., L.T.,	
இன்ப மாலை	... 106, 125, 155,
இராம சுப்பிரமணிய நாவலர்	180, 219, 244, 279
உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்	... 2, 30, 58, 86,
ஆசிரியர்	114, 142, 170, 226 254, 282, 311
ஒரு சாதகர்க்கருளிய போதனை	... 89
ஸ்ரீமத் சுவாமி சிவாநந்தர்	
கதிர் வணக்கம்	... 14
"பரம ஹம்ஸ தாஸன்"	
கதைகள்—	
T. R. ராமநாத சாஸ்திரி B.O.L.	
உள்ளமே உரைகல் செயலன்று	298
தமையனை வழிபட்ட தம்பி	332
தானி நானி தேவிகள் ...	192
தூய கருத்துக்கள்	... 77, 136, 164
பாவிக்கும் கதியுண்டு ...	21
வானப்பிரஸ்தர்	... 219, 248
கிருஷ்ண பகவான் ஸ்ரீமத் பாகவதப் பிரதிபாத்யன் ...	268
திருமழிசை ஆழ்வார் கிருஷ்ணமாசார்ய M.A., B.L.	
குருதேவர் உபதேச மணி மாலை	... 4, 30, 60, 88,
இராம சுப்பிரமணிய நாவலர்	115, 143, 173, 198, 227, 256, 283
குருதேவரிடம் பிரார்த்தனை...	63
"பரம ஹம்ஸ தாஸன்"	
சிவாநந்த வாணி	... 5, 33, 60, 116,
R. ராமகிருஷ்ணன் M.A., L.T.	174, 228, 284, 317
சுவாமி துரியாநந்தரின் உபதேசங்கள்	... 144
ஸ்ரீமத் சுவாமி துரியாநந்தர்	
சுவாமி விவேகாநந்தர்	... 93
பேராசிரியர் S. S. ராகவாசாரியார், M.A.	
சுவாமி விவேகாநந்தரின் கடிதம்	257
ஆசிரியர்	
செய்தி	27, 55, 83, 111, 139,
ஆசிரியர்	167, 194, 251, 306

விஷயம்	பக்கம்
ஞான வாழ்வு ... ஸ்ரீமத் சுவாமி விஞ்ஞானாநந்தர்	258
ஞான வீரம் ... பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்	45
நமது சிகர ஜோதி—ஆசிரியர்	
உலக அமைதியும் அதற்குரிய நெறியும் ...	97
உள்ளத்தின் கீழ்ப்பகுதி ...	146
ஓபாதோ என் கவலை ...	319
சுவாமி விரஜாநந்தர் ...	176
ஞானியின் கவியும் கவியின் ஞானமும் ...	259
தன்னரும் பெருமை! உன்னரும் அற்புதம் ...	66
நமது ஞான வேள்வி ...	7
மகான் அரவிந்தயோகி ...	11
மனத்திண்மையும் அதனை அடையும் வழிகளும் ...	201
மனிதனுக்கும் மதம் ...	230
வழிபடுதல், வழிப்படுதல், வழிப்படுத்தல் ...	37
வாழ்க்கையைப்பற்றிய இரு கொள்கைகள் ...	285
வேண்டுவது ஞான நோக்கே...	118
நாம் விதிக்கு அடிமையா ... ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரா நந்தர்	80, 107
பக்தியே முக்தி ... டர்பன் ச. மு. பிள்ளை	79
பக்தி ரஸாயனம் ... G. கிருஷ்ண மூர்த்தி ஐயர், B.A., B.L.	49, 207
பட்டதாரிகளின் கடமை ... டர்பன் ச. மு. பிள்ளை	330
படைப்பில் வேற்றுமையும் ஒற்றுமையும் ... ஸ்ரீமத் சுவாமி அற்புதாநந்தர்	199
பிரார்த்தனை ...	1, 29, 57, 85, 113, 141, 169, 197, 225, 253, 281, 309
புத்தமதம் மறைந்ததேன் ... R. பத்மநாபன், B.A., B.T.	19
பேரின்ப வாழ்வு ... E. V. சோமசுந்தரம், B.A.	292, 324
மதத்தினைத் தள்ளக் கூடுமா ... ஸ்ரீமத் சுவாமி பவித்ராநந்தர்	152
மதிப்புரை ...	28, 56, 84, 112, 140, 168, 224, 308, 336
மனிதன் ஆன்மா ... A. C. (இலஞ்சி)	210
மனிதனும் உடம்புகளும் ... A. C. (இலஞ்சி)	179
மாதொரு பாகன் ... டர்பன் ச. மு. பிள்ளை	187
மீண்டும் காண்பேனோ ...	236
முயற்சியா முயற்சியின்மையா ... ஜிரால்ட் ஹியர்ட்	240
வாசிட்டம்—வைராக்கியப் பிரகரணம் ... K. V. D. சாஸ்திரிகள்	75
வால்மீகி ஹிருதயம் ...	301
விரதம் ... செ. வே. ஜம்புலிங்கம்	304
விவேகாநந்த வைபவம் ... R. ராமகிருஷ்ணன் M.A., L.T.	15, 34, 64, 313
வேண்டுதல் ... "பரமஹம்ஸ தாஸன்"	336
வேதாந்த ஸாரம் ... இராம சுப்பிரமணிய நாவலர்	162, 188
ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அனுபவ வேதாந்தமும் ... ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரா நந்தர்	131
ஸ்ரீ ராமகிருஷ்ணானந்தரின் பெருமை ... M. சுப்பராய ஐயர், B.A., B.L.	246, 264

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ருக	விக்ருதி ஷு தை மீ	பகுதி க

பிரார்த்தனை

குருதேவர்

தேவி தோத்திரம்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

அனக மேயரு ளசல மேயொளிர் அமரி யேபர சமரியே
கனக மேவர ககன மேமிகு கருணை யார்தரு சலதியே
சனனி யேவர தருணி யேமல தமனி யேபுர தகனியே
தினவி பாவரி நயன கஞ்சவ சிக ராதரி சோதியே 6

[அனகமே—பாவமற்றவளே. அசலம்—மலை. அமரி—துர்க்கை. சமரி—(போர்க்குரியவள்)துர்க்கை. ககனம்—சுவர்க்கம். ஆர்தரு சலதி—அமைந்த கடல். சனனி—தாய். வரதருணி—மேன்மையான நங்கை. தமனி—தணிக்கிறவள். புரதகனி—முப்புரம் எரித்தவள். தினம்—பகல். விபாவரி—இரவு. கஞ்சம்—தாமரை. ஆதரம்—அன்பு.]

சிவசி தம்பரி திகழ்ப ரம்பரி சிரச வுந்தரி யம்பரி
நவம னோகரி யகில காரணி நடன மோகினி மோதினி
புவன நாயகி புனித சாயகி புகலு நேயவி தாயகி
திவசி ரோமணி சிவமனோன்மணி திலக வாணுத லாரணி 7

[மோதினி—களிப்புடையவள். சாயகம்—அம்பு. விதாயகி—விதிப்பவள். திவசிரோமணி—வானத்து விளங்கும் மணி, அதாவது சூரியன். வாணுதல்—ஒளி பொருந்திய நெற்றி யுடையவள்.]

— நாவலர்

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

நாம் தடுத்தாலும் இறைவன் நம்மை விடான்

நம்மாழ்வார் தமது பாசுரத்தில் (திருவாய்மொழி—1-7-7) 'யானாக இசைந்து என் நெஞ்சினுள் இருத்திவைக்கவேண்டும் என்று விரும்பினேனா? தானே பிரதிஞ்ஞை பண்ணி வந்து, எனது சுந்தரமானமனதை நான் அறியாதபடி தன்வசமாக்கி என் ஆத்மாவோடு சேர்ந்திருக்கின்றவன் இனி என்னைத் தன்னிடமிருந்து பிரிந்து போக சம்மதிப்பானா?'' என்று கூறுகிறார். நாம் நம்மைக் காத்து உய்யும்படியாக ஒன்றும் செய்யாது, கண்டவாறு திரிகின்றோம். எனினும், நமது பேய்க்குணத்தை அவன் அறிந்து, நம்மைக் காக்கும் சங்கற்பத்தோடு நமது நெஞ்சிற்குள்ளே எழுந்தருளி, நம்மை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்ற உறுதியோடு சமயம் பார்த்துக்கொண்டு நிற்கின்றான். நாம் அவரது துணையை வேண்டாதிருப்பதுமன்றி, துணை செய்யவரும்போது தடுத்தாலும், அவர் அதைப் பொருட்படுத்தாது, வற்புறுத்தி நம்மைக் காக்கிறார். அவரது செயலைப் பின்வரும் கதை விளக்கும்.

ஓர் ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் மிதமிஞ்சிய கஞ்சத்தனம் உடையவன். அவனுடைய வீட்டிலே உணவுபெறவேண்டுமென்னும் கருத்தோடு ஓர் ஏழை அதை நோக்கி நடந்துகொண்டிருந்தான். அவனைக் கண்ட மனிதர் அவனிடம் ''நீ ஏன் அவனது வீடு தேடிச் செல்கின்றனை? அவன் இம்மியும் கொடாத உலோபியாயிற்றே'' என்று தடுத்தனர். அதற்குப் பதிலாக அவன் ''நீங்கள் பார்த்துக்கொண்டே இருங்கள். உங்கள் கண் காண யான் அங்கேயே உணவு பெறுவேன்'' என்று கூறினான். நேரே அவன் அத்தனவானது வீட்டுக்குச் சென்று, தனது ஏழைமைத் தன்மையையும் அளவுகடந்த பசியையும் இரக்கம் வரும்படியாக எடுத்துரைத்தான். ''என் உயிர் தங்கும்படி ஒரு கவளம் அன்னம் தந்தாலும் போதும்'' என்று கெஞ்சினான். ''அது இங்கு நடக்காது'' என்று பிரபு கூறினான்; ஏழையும் ''நான் தங்களை விட்டுச் செல்ல எப்படி முடியும்? தாங்களே உணவளிக்கவேண்டும்'' என்று வற்புறுத்திக் கூறினான். பிரபு மீண்டும் மீண்டும் ''முடியாது'' என்று கூறியும், ஏழை விடாது மன்றாடிக் கொண்டிருந்தான். கடைசியாகத் தொல்லை பொறுக்க மாட்டாமல், ''உன்னிடம் இலை இருக்கின்றதா?' என்றுகேட்டான் உலோபி. ஏழையும் உடனே தனது கந்தல்மூட்டையை அவிழ்த்து ஒரு தையல் இலையை வெளியேயெடுத்து ''இதோ உள்ளது'' என்று காட்டினான். அப்போது முணுமுணுத்துக்கொண்டே பிரபு 'பிறரது கழுத்தை அறுக்கும் தீர்மானம் உடையவன் கட்டாயமாக வாளையும் உடன் கொண்டுவர மாட்டானா?' என்று சொல்லி, ஒருசிறிது சாதமும் குழம்பும் அளித்து ஏழையின் அலட்டினின்றும் விடுவித்துக் கொண்டான்.

எப்படியேனும் உணவு பெற வேண்டும் என்னும் உறுதி கொண்ட ஏழைப் பெரும் பசிக்காரனைப் போன்றவர் பகவான்; அப்பசியனுக்கு உணவு கொடுக்க மறுக்கும் உலோபியைப் போன்றுள்ளோம் நாம்.

நின்ற நின்ற நிலையிலே இறைவனை நாடுக

நம்மாழ்வார் இறைவனுடைய காரணமின்றிய கருணையால் தமக்குச் செய்த உபகாரத்தை நினைத்து, 'கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில், எண்ணிலும்வரும் இனியென்னவேண்டுவம்' என்றார்; அதாவது எம் பெருமானைப் பக்தியோடு தொழுதால் கண்ணுக்குப் புலப்படுவன், தியானம் பண்ணினாலும் வந்து நிற்பான்; இனிமேல் என்ன குறை?' என்று அருளிச் செய்தார். இதன் கருத்தாவது; நாம் பகவானை அடைதற்குச் செய்யவேண்டிய தவமும் கிரியைகளும் ஒன்றும் இல்லை; செய்ய வேண்டியதெல்லாம், அவர் மீது முழு நம்பிக்கைகொண்டு அவரையே புகலாகப் பற்றிக்கிடத்தல் ஒன்றேதான். இப்பாசுரத்தின் பொருளை நம்பிள்ளையெனும் ஆசாரியர் ஒரு நாள் மிக அழகாக விரித்துக் கூறி வந்தார். அப்போது வேல்வெட்டி நம்பியார் எனும் பக்தர் ஒருவர் ''முத்தியடைய நமக்கு வேறொன்றும் வேண்டாவோ? பகவானுடைய நிரந்தரமான (காரணமின்றிய—நிர்ஹேதுக) கிருபை யொன்றே உபாயமா? நாமும் சாதனம் பண்ணவேண்டாமா? பகவானது கிருபை நம்மை எதிர்பாராது தானாக நம்மிடம் பெருகுகின்றதா? அதைப்பெறுதற்காக நாம் செய்யவேண்டிய முயற்சி இல்லையா? நாம் நம்மை எவ்விதத்திலும் தயாரித்துக் கொள்ள வேண்டாமா? நம்மிடம் தகுதி (யோக்யதை) வேண்டாமா? ஸ்ரீ ராமபிரான் கடற்கரையிலே அணை கட்டுமுன் வருணபகவானைச் சரணம் புகுதற்காகப் புல்லைக் கீழேபரப்பி, கிழக்குமுகமாகத் திருப்பிக் கைகூப்பிக் கொண்டு சில நியமங்களைப்

பின்பற்றினர் என்று வால்மீகி ராமாயணம் கூறுகிறதே. கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலிய சாதனங்கட்குத் தக்க முயற்சி வேண்டியிருப்பது போல, பகவானையே உபாயமாக (புகலாக)ப் பற்றிக் கிடக்கையாகிற பிரபத்தி மார்க்கத்திற்கும் (சரணாகதியாகிற வழிக்கும்) நிபந்தனை ஒன்றேனும் இருக்கவேண்டுமன்றோ?'' என்று தமது சந்தேகத்தை வெளியிட்டார். அப்போது தெய்விக மகிமை வாய்ந்த ஆசாரியராகிய நம்பிள்ளை என்பார் பின்வருமாறு மறுமொழி அருளினார்: பாரும்! நீர் கூறிய உதாரணம் சரி. ஆனால் ஒன்றைக் கூர்ந்து கவனியும். ஸ்ரீ ராமபிரானுக்கு வருணனைச் சரணம் புகும் உபாயத்தை எடுத்துக்கூறியவர் விபீஷணரன்றோ? அவ்விபீஷணர் இராமபிரானைச் சரணம் புகவந்த காலத்து, அந்த உத்தமமான நல்ல காரியத்தைச் செய்வதற்கு முன் தம்மைச் சுத்திசெய்து கொள்ளுதற்காகத் தாம் நின்ற கடற்கரையிலே கடலில் முழுக்கிட்டு வந்தாரா? இராக்கதராயிருந்த அவர் சுத்தி செய்துகொள்ளாதது ஏன்? இராமபிரானும் அவர் கூறிய உபாயத்தைப் பின் பற்றும் போது, அவர் செய்தபடியே தாமும் ஒருநியமத்தையும் கவனிக்காமல் சரணாகதி பண்ண வேண்டுமன்றோ? எனினும் சில விதிகளைக் கைக்கொண்டமையால் நாம் ஊகிக்க வேண்டியது ஒன்றுஉளது. ஸ்ரீ ராமர் தாம்பிறந்த இக்ஷ்வாகு குலத்திற்கு (க்ஷத்திரிய குலத்திற்கு) ஏற்ப, சரணாகதிக்கு முன் செய்யத்தகுந்த கிரியைகளை (நியமங்களை)ப் பின்பற்றியது மிகவும் பொருத்தமாயிற்று; ஆனால் இராக்கத குலத்திலே பிறந்த விபீஷணர்க்கு அம்மாதிரியாக முன் செய்ய வேண்டிய கிரியைகள் தேவையாகா. ஆதலால் இதிலிருந்து தெளியவேண்டியது யாதெனில், மனிதர் தாம் தாம் நின்ற நின்ற நிலைக்குத் தகுந்தவாறு செய்தல் வேண்டுமென்பதே. சரணாகதி பண்ணுவதற்காக, முறையாக நியமங்கள் சிலவற்றைப் பின்பற்றி வருபவன் அவற்றை மீறவேண்டுமென்பதும் இல்லை; நியமங்களை அனுஷ்டிக்கும் பழக்கமில்லாதவன் அவ்விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் இல்லை; சுத்தியாய் நியம நிஷ்டைகளோடு இருக்கும் ஒருவன் அவற்றை விட்டுவிடவும் வேண்டாம். அசுத்தியாய் நியமங்களற்ற நிலையிலுள்ளவன் அவற்றைப் புதிதாகக் கைக் கொள்ளவும் வேண்டாம். சுத்தியோடிருப்பவன் அசுத்தியைத் தேடவும் வேண்டாம், அசுத்தியோடிருப்பவன் சுத்தி தேடவும் வேண்டாம். அவனவன் நின்ற நிலையே அவனவனுக்கு அமையும்; அந்தந்த நிலைக்கு ஏற்ப அவன் நடந்துகொள்ளும் கடமையுடையவன். பகவானது கிருபை வேண்டாத போதும் எதிர்பாராதும் வருதலால், அக்கிருபையைப்பெறுதற்கெனத் தகுதி தேடவேண்டிய அவசியம் இல்லை. அவனது கிருபை நம்மை நாடிவரும் போது விலக்காமையொன்றே வேண்டுவது.

எம்பாரைப் பார்த்துப் பேருளாளரான இராமாநுஜாசாரியார் பின்வருமாறு போதித்தனர்: ''பகவான் உயர்ந்த மகிமையுடையவர், எண்ணற்ற குணங்களை உடையவர், ஆதலின் அவரை வணங்கு என்று நம்மாழ்வார் போதிக்கின்றனரே. கிட்டுதற்குரிய உயர்ந்த நிலையில் இருக்கும் அவரை நாம் எவ்வாறு தொழமுடியும்? முடவன் யானைக் கழுத்தின் மேல் ஏறுவது எப்படி நடக்கும்? இவ்வாறு நாம் ஆழ்வாரை வினவலாம். ஆனால் ஆழ்வார் பின்வரும் பதிலை அருளுவார் என்றறிக: அவ்வாறன்று. யானையே தாழ்ந்து காலை நீட்டிப் படுத்துக்கொண்டு, கழுத்தைத் தணித்து வைத்துக் கொள்ளுமாயின், அப்போது முடவனும் அதின் மீது ஏறலாமன்றோ? இறைவனது மகிமை எல்லையற்றதாவது போல அவனது (ஸௌலப்யமும்) சுலபமான தன்மையும்—பிறர் தம்மை எளிதாக அணுகி நினைத்த காரியங் கொள்ளும்படித் தாம் தாழநின்று பிறரோடு கலந்து அளவளாவுகின்ற தன்மையும்-அளவுகடந்ததாகிறது.'' பகவானது அவதாரங்களை நினைத்துப்பார். அறிவில் மிக்காரும் தவத்தில் சிறந்தாரும் இன்ன நிலைமையன் என்று அறியமுடியாத பெருமை வாய்ந்த எம்பெருமானே கல்லாதாரும் நோன்பைப் பழகியறியாதவரும் 'இதோ இன்னவாறு நிற்கின்றான் என்று கண்ணாரக் கண்டு கூறுமாறு, இராமன் கிருஷ்ணன் முதலான அவதாரங்களாக எழுந்தருளுகின்றான். பிரம்மதேவன் கண்ணனை இன்னானென்று அறியாது, அவனுடைய மாடு கன்றுகளையும் இடைப்பிள்ளைகளையும் மறைத்துவைத்தான்; பின் சில மாதங்கள் சென்று தன்பிழையை உணர்ந்து மன்னிப்புக்கேட்டுப் பெற்று, கண்ணனைப் போற்றிச் சென்றான். அவ்வளவு பெருமை வாய்ந்தவன் யசோதை தன்னை உரலிற் கட்டிவைக்கவும் இடங்கொடுத்தான். தனது தெய்வத்தன்மையைக் காட்டி அவர்கட்கு ஆச்சரியத்தை ஊட்டவும் செய்தான். அவதார நிலையிலே இறைவன் தனது மகிமையை முற்றிலும் மறைத்து, மனிதனாகவே பலரொடும் பழகித் தன்னை யனுபவிக்கச் சமயம் அளிக்கின்றான். மானிடர்க்காக இறைவன் அவதார நிலையிலே படாதனபட்டுக் கருணையினால் தன்னைத்தாழ்த்

திக் காட்டும் போதும் அவனைத் தெய்வமென்றுஉணரமாட்டாதவர்கள் நெறிதவறிச் செல்பவர்களேயாவார்; ஆனால் அவதாரத்தின் இயல்பை உணரும் பேறு பெற்றவர்களோ, பரமனே மனிதனாக வருவதைக் கண்டதும், பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்குகின்றனர். எம்பாரே, நீர் இரண்டாவதான நல்ல வகுப்பைச் சேர்ந்தவர். தரும சிந்தனையுள்ளவர் குளம் வெட்டுகின்றனர். ஆனால் ஒரு பாவி அதில்விழுந்து மரணம் அடைகின்றான், மற்றொருவனோ அதில் இறங்கி நீராடித் தாபத்தைத் தணித்தும், அதில் உள்ள நீரைப் பருகித் தாகத்தைத் தணித்தும் அகமகிழ்கிறான். அவதாரம் அம் மாதிரியான ஏரி போன்றது. ஒரு விளக்கை ஏற்றி இல்லத்தில் வைக்கின்றனர். விட்டில்கள் அதில் வீழ்ந்து மரிக்கின்றன; ஆனால் அதே சமயம் பாகவதம் வாசிக்கவும், அடியார்க்கு உணவளிக்கவும், மற்ற புண்ணிய நற் காரியங்களைச் செய்யவும் நல்லார் பயன் படுத்துகின்றனர். அவதாரம் இவ்விளக்கைப் போன்றது என்று அறிக. பகவான் நமக்கு வெகுதூரம் விலகியிருப்பவர் அல்லர்; அவர் நமதருகே தம்மோடே எப்போதும் இருப்பவர். அறிவுக் கண்ணிற்கு அவர் மறைவாய் தொலைவில் உள்ளவராய் இருப்பார்; ஆனால் அன்புக்கண்ணிற்கு அவர் எளியவராய், அருகிலிருப்பவராய்க் காணப் படுவார்.’’

குருதேவர் உபதேச மணிமாலை

(314-ம் பக்கத் தொடர்ச்சி)

708–அவதார புருடரின் சக்தி

தெய்விகத் திறனோடவரவ தரிப்பர்,
செப்பிடுஞ் சமாதிகள் தம்மில்
உய்வகை தாழ்ந்த துயர்ந்ததென் றறிவோர்
உரைக்குமெந் நிலையினும் புகுவார்;
மெய்வகை மீள்வர்; வேந்தரண் மனையில்
வேற்றவ ரோர்வரம் பளவே
கைவரச் செல்வர், காவலன் புதல்வன்
கடந்தவ ணெங்கணும் புகலாம். 137

(கைவர-ஒழுங்காக. வேந்து-அரசன். கடந்து அவன்-கடந்து அவ்விடம்.)

722–அவதார புருடரும் சித்தரும்

அணைபெரு மரமொன் றாற்றினின் மிதப்பின்
அதன்மிசை யாயிரம் பறவை
புணையென விருப்பிற் புனலிடை மூழ்கா
புனன்மிசை நாணலொன் றின்மேல்
இணைதரு காக மிருப்பினு மூழ்கும்,
இகத்திறை யவதரித் திடுங்கால்,
துணையடிச் சரண்புக் குய்பவர் பலரால்,
துணையலர் சித்தர்மற் றோர்க்கே. 138

(புணை-தெப்பம். இளைதரு-இளைத்த.)

729–எல்லாம் வல்ல அவதார புருடர்

அவதரிப் பவரா லகலிடத் தாகா
அரும்பொருள் யாதொன்று மில்லை,
சிவனெனு மான்மா சீவனென் பவற்றைச்
சேர்ந்தநுண் பிரச்சினை தீர்ப்பார்;
அவருபதேச மறச்சிறு சேயு
மறியும்,பல் கோடிகற் பாந்தம்
இவருமஞ் ஞான மிரித்திடு மொளிசேர்
இறையியல் ஞானசூ ரியரே. 139

(பிரச்சினை-கேள்வி. அறச்சிறு சேய்-மிகச் சிறு குழந்தை. இவரும்-பொருந்தும். இரித்திடும்-போக்கிடும்.)

734–ஞானியின் ஆராய்ச்சி

கடிமனைப் புகுந்த கள்வனங் குள்ள
கட்டினாற் காலிகள் முதலாம்
படிதரு பொருள்கள் பார்த்திவை யல்ல
பற்றுதற் குரியவை யென்று
கடிதினி னீக்கிக் கனகமார் பேழை
கண்டது மிதுவென மகிழ்ந்து
முடிபுறப் பெயர்வன் முதற்பொரு டன்னை
முன்னுற நாடலஃ தொக்கும். 140

(கனகம் ஆர் பேழை-பொன் உள்ள பெட்டி. முடிபுற-முடிவாக. பெயர்வன்-நீங்கிவிடுவான்.)

736–மக்களில் ஞான வேறுபாடு

பண்பினா லளவாற் பயிறரு ஞானம்
பலவகை வேறுபா டுறுமால்,
நண்புறு முலகோர் ஞானமோ ரறையை
நன்குவி ளக்கொளி போலும்;
தண்படு மதியி னொளிநிக ராகுஞ்
சால்புறும் பத்தர்தஞ் ஞானம்;
விண்பெறு மவதா ரத்தவர் ஞானம்
வெங்கதி ரொளியொத் திடுமே. 141

(பயில்தரு-பயிலும். மதி-சந்திரன். வெங்கதிர் சூரியன்.)

737–'நான்' என்பது உண்மையில் இல்லை

முதன்முத லுன்னை முற்றிலு முணர்வாய்,
முதல்வனைப் பின்புநீ யுணர்வாய்,
முதலுறு நானென் பதுவெது வெனப்பார்,
முற்றிய கைபதந் தசையோ?

இதமுற நோக்கி னில்லையஃ தென்ப
திலங்கிடு முள்ளித ழுரிபோல்
கதமுறு மகத்தைப் பகுத்திடின் யாதுங்
காண்கிலா யஃதறின் இறைமை. 142

(கதம் உறும்-அடையப்படும். இறைமை-தெய்விகப்பான்மை: உள்ளி-வெங்காயம்; உரி-தோல்.)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர்மடம், 1929, ஏப்ரல் 8, திங்கள்

முற்பகல் வேளை. மணி சுமார் 11-30 இருக்கும். மகாபுருஷ மகாராஜர் ஸ்நாநம் செய்துவிட்டு ஸ்நாந அறையினின்றும் வந்துகொண்டிருந்தார். கேதார் பாபா (சுவாமி அசலானந்தர்) அவருக்கு வந்தனம் செய்வதற்காகக் காத்துக்கொண்டிருந்தார். மகாபுருஷர் தமது அறைக்குத் திரும்பியதும் கேதார் பாபா அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். மகாபுருஷர் சிரித்துக்கொண்டே "கேதார் பாபாவுக்கு ஜே! அசலானந்த சுவாமிக்கு ஜே!" என்று கூவினர். மறு நிமிஷமே அவர் கம்பீரமான தொனியில், "ஜய பிரபு! ஜய டாகுர், தீன சரண பிரபு!" என மொழிந்தார். (குருதேவரான இராமகிருஷ்ணரையே டாகுர் என்று குறிப்பர்). இவ்வாறு கூறிக்கொண்டே உணவு உட்கொள்ளும் பொருட்டு ஆசனத்தமர்ந்தார். பிறகு மீண்டும், "பிரபுவே, எங்களுக்குச் சுத்தமான பக்தியை அளியுங்கள். உலகில் காணப்படும் போலி பக்தி வேண்டாம், போலி பக்தியைக் கொண்டு ஆவது என்ன உண்டு?—குருதேவர் பரம தயாளு. அவரிடம் எதை விரும்புகின்றோமோ அதை அவர் நிச்சயமாகத் தருகின்றார்" என்று கூறினர்.

இவ்வாறு கூறிவிட்டு, கேதார் பாபாவை நோக்கி, "முதலில் நாராயணனுக்கு நைவேத்தியம் செய்கின்றேன். இதோ உமக்காகப் பிரசாதம் இங்குள்ளது. நீர் நாராயணனே ஆவீர். உம்முடைய சேவை முதலில் ஆகட்டும்" என்று சொல்லி, மகாபுருஷர் தமது உணவுத் தட்டினின்றும் நல்ல நல்ல உணவு வகைகளை எடுத்துக் கேதார் பாபாவின் கையில் வைக்கலானர். "இதெல்லாம் குருதேவருடைய பிரசாதமாகும். முதலில் நாராயணனுக்குப் பகிர்ந்தளித்துவிட்டுத்தான் பிறகு இதைப் புசிக்கவேண்டும். விவேகானந்த சுவாமிகள் சிற்சில சமயங்களில் தாமே உணவு சமைப்பார். வட இந்தியாவில் மக்கள் வைத்துள்ளதைப் போன்ற சிறு நீர்க்கலமொன்று அவரிடத்திலிருந்தது. அதிலேயே அவர் சோறு சமைப்பார். பிறகு யாவற்றையும் குருதேவருக்கு நிவேதனம் செய்துவிட்டு, முதலில் எங்களெல்லோருக்கும் பிரசாதம் தந்த பிறகுதான் தாம் உணவு உட்கொள்ளுவார். முதன் முதலில் நாராயண சேவை; பிறகுதான் தனது போஜனம் என்று அவர் சொல்லுவார்" என்று மகாபுருஷர் பகர்ந்தார். (நாராயண சேவை என்பது அதிதிகளான பிறரை உண்பித்தல் என்பதாகும்.) கேதார் பாபா பிரசாதத்தை உட்கொண்டு வெளிச் சென்ற பிறகுதான் மகாபுருஷ மகாராஜர் உணவு புசிக்க அமர்ந்துகொண்டார்.

மகாபுருஷருக்கு அருகில் அவருக்குப் பணிவிடை யாற்றும் பொருட்டு அன்பரொருவர் அமர்ந்திருந்தார். சம்பாஷணைக் கிடையில் மடத்தைச் சேர்ந்த சாது ஒருவர் கிராமமொன்றினில் மாதுகரி பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டு வருவதைப்பற்றிய பேச்சு எழுந்தது. மகாபுருஷர் அது சம்பந்தமாகக் கூறினர்: "நாங்களும் கூட ஒரு காலத்தில் இவ்வாறு மாதுகரி பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டோம். அது வெகுகாலத்திற்கு முன் நடைபெற்றது. அப்பொழுது விவேகானந்த சுவாமிகள் மடத்தில் விதியொன்று செய்திருந்தார். அதாவது விடியற்காலம் 4 மணிக்கு மணி அடித்தவுடன் யாவரும் படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு குருதேவருடைய பூஜை அறைக்குச் சென்று தியானம் செய்ய வேண்டும். விவேகானந்த சுவாமிகளும் தியானத்திற்கு அங்கு வந்துவிடுவார். யார் இவ்வாறு பூஜை அறைக்கு வரவில்லையோ அவருக்கு அன்று மடத்தில் சாப்பாடு போடப் படமாட்டாது; அவர் மாதுகரி பிக்ஷை எடுத்துத்தான் சாப்பிட வேண்டும். நாங்கள் யாவரும் விடியற்கால

வேளையில் எழுந்து தியானம் செய்வது உண்டு தான்; ஆனாலும் ஒவ்வொரு நாள் யாராவது தூக்கத்தின் வசப்பட்டுப் போய் மணி அடிப்பதைக் காதில் கேளாமல் இருந்து விடுவதும் உண்டு. காலை வேளையில் விவேகானந்தர் சொல்லுவார்: 'நாமே இந்த விதியை மதித்து ஒழுகாமல் போனால், சிஷ்யர்களான இச்சிறுவர்கள் எவ்வாறு அதை மதித்து நடப்பார்?' என்று. 'போங்கள், மாதுகரி பிக்ஷை எடுத்துச் சாப்பிடுங்கள்' என்றும் கூறிவிடுவார். இம்முறையில் நானும் ஒன்றிரண்டு தடவை மாதுகரி எடுத்துச் சாப்பிட்டிருக்கிறேன்.''

பிற்பகல் வேளை 5-30 மணி இருக்கும். மகா புருஷ மகாராஜர் தமது அறையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது இளம் பக்தர் ஒருவர் வந்து நமஸ்காரம் செய்துவிட்டுத் தரையின் மீது அமர்ந்துகொண்டார். அவருடைய பெயர் என்னவென்று விசாரித்துவிட்டு மகா புருஷர், ''இங்கிருந்து (என்னிடமிருந்து) நீ தீக்ஷை பெற்றிருக்கிறாயோ?'' என்று வினவினார்.

பக்தர்: ஆம், மகாராஜ், சென்ற சிராவண மாதத்தில் நான் தீக்ஷை பெற்றேன்.

மகாபுருஷர்: வெகு நல்லதாயிற்று. நீ ஜபம் தியானம் ஒழுங்காகச் செய்துவருகிறாயா? இவ்விடத்தினின்றும் நீ தீக்ஷை பெற்றிருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி, நீ இறைவனுடைய திருநாமத்தைச் சொல்ல வேண்டும். அப்பொழுது நீ ஆனந்தம் பெறுவாய். பெரும் மனக்கசிவுடன் நீ இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும்: ''இறைவ! எனக்கு பக்தி தருவீராக. நம்பிக்கை தருவீராக. புவனத்தை மோகிக்கச் செய்கின்ற உமது மாயை என்னை மயக்காது இருக்குமாக!'' என்று. எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் அவருடைய நாமஜெபம் செய்து, மிகுந்த வியாகுலத்துடன் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பக்தர்: முன்பெல்லாம் நான் தியானம் ஜபம் நன்றாகத்தான் செய்துவந்தேன். ஆனால் இப்பொழுது அதற்கெல்லாம் அவ்வளவு நேரம் கிடைப்பதில்லை. ஆகையால் கொஞ்சம் கொஞ்சம் செய்துவருகின்றேன்.

மகா: நல்லது. ஆனால் எவ்வளவு குறுகிய நேரமே தியானமும் ஜபமும் செய்த பொழுதிலும், மிகுந்த பற்றுதலுடனும் மிகுந்த பிரேமையுடனும் அதைச் செய்ய வேண்டும். 5 அல்லது 10 நிமிஷமே அதைச் செய்தாலும், மனம் முழுவதையும், உள்ளம் பூராவையும் அதில் செலுத்திவிட வேண்டும். இறைவன் அந்தர்யாமி, உள்ளத்தின்கண் உறைபவர். அவர் உனது உள்ளத்தையே கவனிக்கின்றார். உன்னிடம் பக்தி எவ்வளவு உள்ளது என்பதை அவர் கவனித்து நோக்குவாரே யன்றி, நீ எவ்வளவு நேரம் தியானம் செய்கின்றாய் என்பதை அவர் கவனிக்கமாட்டார். மாலை நேரத்தில், சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம், நிறைந்த உள்ளத்துடன் இறைவனை வேண்டிக்கொள்வாயாக. உள்ளங் கசிந்தவண்ணம் பிரார்த்தனை செய்வாயாக: ''பிரபுவே, இந்த ஸம்ஸாரமாகின்ற சுழலில் சிக்கி உம்மை நான் மறவாமல் இருப்பேனாக!' என்று. இந்த உலக வாழ்க்கை உள்ளதே, இது ஒன்றிரு நாளைய விஷயமேயாகும். இந்த ஸம்ஸார மாயையில் விழுந்து இறைவனை மறந்து விடாதே. நீ நூற்றுக் கணக்கான காரியங்கள் செய்யலாம், கோடிக்கணக்காகப் பணம் சம்பாதிக்கலாம், ஆனால் மனத்தில் நீ நன்கு உணரவேண்டியது என்னவென்றால், இவை எல்லாம் அநித்தியமானவை, என்றேனும் ஒரு நாள் இவற்றை எல்லாம் விட்டுவிட்டுச் செல்ல வேண்டி வரும் என்பதுதான். பகவான் ஒருவரே நித்திய வஸ்து ஆவார். நீ அந்த பகவானையே கூவி அழைப்பாயாக, அவரிடமே சரணடைவாயாக. அப்பொழுது உனது பந்தங்கள் யாவும் அறுபட்டுப் போகும்.

பக்தர்: நீங்கள் எனக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள். அப்பொழுது எல்லாம் நலமாகவே அமையும்.

மகா: ஆகா, ஆசீர்வாதமே செய்கின்றேன். நன்றாக ஆசீர்வாதம் செய்கின்றேன். எங்களிடம் ஆசீர்வாதத்தைத் தவிர வேறு என்ன உள்ளது? உனக்கு ஆசீர்வாதம் செய்வது காரணமாகவேதான் நான் இதெல்லாவற்றையும் உனக்குக் கூறுகின்றேன். குருதேவரைக் கூவி அழைத்து, அவரிடம் சரண் அடைவாயாக. நம்முடைய குருதேவர் இன்னமும் ஜீவித்திருக்கின்றார். நீ மிகுந்த வியாகுலத்துடன் அவரைப் பிரார்த்தித்துக்கொண்டாயாகில் அவர் நிச்சயமாகச் செவி சாய்ப்பார். மக்கள் பலருடைய நன்மையை உத்தேசித்துப், பரபிரம்மசொரூபியான பகவான் இந்த யுகத்தில் இராமகிருஷ்ண ரூபத்தில் தோன்றினர். யுகாவதாரமான அவரை அண்டியிருக்கின்ற உனக்குக் கவலை ஏதும் வேண்டாம்.

பக்தர்: லஜ்ஜை காரணமாகவும் பயம் காரணமாகவும் ஒரு விஷயத்தை உங்களுக்கு இதுவரையில் தெரிவிக்காமல் இருந்துவிட்டேன். சில நாட்களுக்குமுன் நான் மணம்

புரிந்துகொண்டேன். என் தந்தையும் தாயும் பிடிவாதம் செய்து கதறியழுததால் நான் விவாகம் செய்துகொள்ள வேண்டி வந்தது. எனக்கு அதில் கொஞ்சமும் விருப்பம் இல்லை.

மகா: அதனால் என்ன? பிறப்பு, இறப்பு, விவாகம் ஆகிய மூன்று விஷயங்களில் மனிதனுக்குக் கொஞ்சமும் அதிகாரம் இல்லை. இவை இறைவனுடைய ஆக்ஞைப்படி நிகழ்பவை. உனக்கு விவாகம் ஆயிருந்தாலும் கூட, அதில் நீ பற்றுக்கொண்டு விடவேண்டுமென்பது இல்லையல்லவா? சரி. நீ உனது வேலைகளையும் கடமைகளையும் செய்துவா. கூடிய அளவுக்கு சாதனையையும் அப்பியசித்துவா. உனது மனைவியும் அவ்வாறே செய்யட்டும். அவளுக்கும் வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்று உண்டு அல்லவா? இந்த வாழ்க்கை போகானுபவத்திற்காக ஏற்பட்டதல்ல. நீ பகவானால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்; அவளும் அவ்வாறேதான். நீ பகவானுடைய ஓர் அம்சம் ஆவாய்; அவளும் ஜகதம்பிகையின் ஓர் அம்சமே ஆவாள். நீ எம்மாதிரி வாழ்க்கை முறை வாழ்கின்றாயோ அதை அவளுக்கும் புகட்டுவாயாக. அவளும் பகவானுடைய திருநாமத்தை ஜபிக்கலாவாள், பூஜை பாராயணம் செய்வாள், ஸம்ஸாரக் கடமைகளையும் புரிவாள், முதியோருக்கு சேவையும் பணியும் புரிவாள். இம்மாதிரியெல்லாம் அவளுக்குப் பயிற்சி கொடு. நீ செய்யவேண்டியது இதுதான். இவ்வாறெல்லாம் செய்யாமல் உன் மனைவியை வெறும் சரீரபோகத்திற்கான பொருளாக உபயோகித்தாயானால் நான் உன்னைப் பார்த்து சீ, சீ என்று கூறுவேன். நீ உலகப் பற்றுக்கொண்டுவிடாமல் இருப்பாயாக. காமமும் காஞ்சனமும் மனிதனுடைய மனிதத் தன்மையை அழித்துவிடுகின்றன.

பக்தர்: என்னுடைய நம்பிக்கை இதுதான்—உங்களுடைய ஆசீர்வாதம் எனக்கு இருக்கும் வரையிலும், குருதேவருடைய ஆதரவின் கீழ் நான் இருக்கும் வரையிலும், எல்லாம் நன்றாகவே அமையும்.

மகா: எல்லாவற்றிற்கும் மேலாக, வாழ்க்கையினுடைய குறிக்கோளை மறந்துவிடாதே. வாழ்க்கை என்பது மிகவும் குறுகிய காலத்தினது, அநித்தியமானது, சுகபோகங்களுக்காக அது ஏற்பட்டதல்ல. இதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள். இப்பொழுது பூஜையறைக்குக் கொஞ்ச நேரம் சென்றுவா. குருதேவருக்கு நமஸ்காரம் செய். அவரைத் தியானி. அவரிடம் ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்துகொள். அவர் நிச்சயமாக உனக்கு சாந்தியை அளிப்பார்.

நமது சிகர ஜோதி

புத்தாண்டு மங்கள வாசகம்

இம்மாதம் குருதேவரது அருளால் நமது 'விஜயத்'திற்கு முப்பது ஆண்டு முடிந்து, முப்பத்தோராம் ஆண்டு தொடங்குகிறது. பழைய ஆண்டு கழிந்து புதிய ஆண்டு புகுதல் போல, இவ்வமயம் அதற்கு அறிகுறியாக, எங்கணும் பசியும், பிணியும், வறுமையும் கழிந்து தள்ளா விளையுளும் நோயற்ற வாழ்வும் தாழ்விலாச் செல்வமும் புகுவனவாக! தளர்வும் கோழைத்தனமும் அச்சமும் ஒழிந்து, உறுதியும் வீரமும் அஞ்சாத்தன்மையும் ஒன்றுவனவாக! பகையும் வெறுப்பும் பாவமும் மறைந்து, நட்பும் ஆர்வமும் புண்ணியமும் ஓங்குக! மக்களின் அகவுலகத்தும் புறஉலகத்தும் இருளும் மருளும் பொய்ம்மையும் நீங்கி, ஒளியும் ஞானமும் மெய்ம்மையும் குடிகொள்வனவாக! உலக மக்கள் அனைவரும் சுகமும் சாந்தியும் மங்களமும் பெறுவாராக! மெய்யன்பு, துறவு, ஞானம், தன்னலமறுப்பு முதலான (உலகிற்கு) ஆக்கந்தரும் கொள்கைகட்கும் சக்திகட்கும் வெற்றி உண்டாகுக! "பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை. கலியுங்கெடும் கண்டு கொண்மின்" என்றும், "ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க, வையகமும் துயர் தீர்கவே" என்ற நிறைமொழி மாந்தரது வாழ்த்துரைகள் நிறைவேறுவனவாக!

நமது ஞான வேள்வி

பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்றது சக்தி. எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும் சக்தியின் திருநடனம் காணப்படுகின்றது. உள்ளியற்கை

யிலும் புற இயற்கையிலும் ஆராய்ச்சியாளர்க்குப் புலனாகும் மாபெருஞ் சக்தி பெருவியப்பையும் பேரச்சத்தையும் ஊட்டும் இயல்பினதாகின்றது. அச்சக்தி மனிதனை ஆழித்துரும்பு போல ஆட்டி வைப்பதையும் அறிஞர் உணர்கின்றனர்; அன்றியும், புற இயற்கையிலே வெளிப்படும் பெருந்திறனை வசப்படுத்தி ஆளுதற்கும் ஆசைப்படுகின்றனர், ஓரளவிற்கு அதனை அடக்கியாண்டு பயன்படுத்தவும் வல்லவராகின்றனர். ஆனால் அச்சக்தியின் மூலத்தைப் பற்றியும் அதன் உண்மையான இயல்பைப்பற்றியும் அன்னார் சிந்திப்பதில்லை; இதனால் விளையும் கேடு பெரிதாகின்றது. இச்சக்தியைச் சடப்பொருட் சக்தியாக மயங்கி, உலகியல் வாழ்க்கைக்கும் பொருள் இன்பங்களைக் குவித்தற்கும் தாராளமாகப் பயன்படுத்த முயல்கின்றனர். சடப்பொருள் வாயிலாக வெளிப்படும் அச்சக்தியின் மூலத்தைப் பன்னெடுங்காலம் ஆராய்ந்து கண்ட மாபேரறிஞரது முடிபு புறக்கணிக்கப்படும் தன்மையதன்று. அகவுலகத்தும் புறவுலகத்தும் கசியும் சக்திக்கு மூலம் 'உலவா இன்பச் சுடர்' ராயும், 'இயல் உண்மை-அறிவு-இன்ப' வடிவாயும் உள்ள பரம் பொருளே. ''ஊர்த்வமூலம் அதஸ் சாகம் அச்வத்தம் ப்ராஹு: அவ்யயம்' என்றார் கீதாசாரியர் (கீதை-15-1); முடிவற்றதாய்த் தோன்றும் இந்த ஸம்ஸாரமாகிய மரத்திற்கு மேலே வேருள்ளது, கீழே கிளைகளும் இலைகளும் உள்ளன என்பது அதன் கருத்து. பரம்பொருளை அடிப்படையாகக் கொண்டதே இவ்வுலகம்; ஆதி பகவன் முதற்றே யுலகு! உலகத்தே புலப்படும் பல்வகைச் சக்திகட்கும் பிறப்பிடம், சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத தொலையில் நிற்கும் உண்மைப்பொருளே. அன்றியும் 'விஷ்டப்ய அஹம் இதம் க்ருத்ஸ்னம் ஏகாம்சேன ஸ்திதோ ஜகத்' (கீதை-10-42)-இந்த உலகனைத்தையும் என்னுடைய சக்தியின் ஒரு பகுதியால் தாங்கி நான் நிற்கின்றேன் என்கின்றனர் பகவான். உலகில் வெளிப்படுவது அவரது சக்தியின் ஒரு கூறுதான்; வரம்பிலாத சக்திக்கெல்லாம் பேரூற்றான அப்பொருளின்கண் சக்தி அடங்கியொடுங்கி நிற்கும்போது பரமன் அறிதுயிலில் அமர்ந்தவனாகத் தோன்றுகிறான். அப்பரம்பொருளைக் கண்டுணர்ந்தவரே அனைத்துச் சக்திகளின் மூலத்தை அறிந்தவராவார். அம்மூலத்தைக் கண்ணுறுவார்க்கே, படைப்பின்கண் விளங்கும் சக்திக்கடலும் அதன் வீச்சும், பரம்பொருளின் அசைவற்ற அமைதி நிலையில் அடங்கியுள்ள எல்லையிலாச் சக்தியோடு ஒப்பிடுங்கால், அற்பமாவது நேரே தோன்றும்; அன்னார்க்கே உலகிலுள்ள எவ்வகைச் சக்தியும் உண்மையிலே தெய்விகச் சக்தியாதல் புலப்படும். இவ்வுலகப் பொருள்கட்கும் நிலையான ஞான உலகப் பொருள்கட்கும் இடையே உள்ள தொலையும் வேறுபாடும் எவ்வளவின என்பதை மெய்ப்பொருட் காட்சி பெற்ற அப்புனிதரே அறியவல்லார். ஆதலின் உலகத்தின்கண் உள்ள ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு உயிரையும் ஆட்டி வைப்பது தெய்விகச் சக்தியே; பரம்பொருளின் அருட்சக்தியே. காலச்சக்கரம் சுழன்று நிகழ்த்தும் பலப்பல காரியங்கள் அனைத்திற்கும் பின்நிற்பது இறைவனின் சங்கற்ப சக்தியே. தனி வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையும் தேசவாழ்க்கையும் நடத்தி வருவது ஞான சக்தியே. படைப்பு முழுவதையும் உண்ணின்று இயக்கி வருவது, உயிர்கள் அனைத்தும் கட்டு நீங்கி விடுதலை (மோக்ஷம்) அடைதல் வேண்டும் என்னும் அருள் நோக்கமேயாகும். இதனால் பெறப்படுவதாவது, தடுத்தற்கரிய அந்நோக்கத்திற்கு ஏற்ப நடைபெறும் மனித வாழ்வும் தேசவாழ்வுமே நேரான நிலையான நெறியிலே செல்லும் வாழ்வாகும் என்பது. அன்றியும், வாழ்க்கையெனும் மரம் வளம் பெற வளரவேண்டின், யாம் நீர் ஊற்ற வேண்டியது வேரிலேயாகும்; அது போல் மனித வாழ்வு (தனி வாழ்வாயினும் சமூக வாழ்வாயினும்) சீர்மைப்பட்டு ஓங்க வேண்டுமாயின், அதற்கு அடிப்படையான ஞான வாழ்வையே உறுதிப்படுத்தல் வேண்டும்; தெய்விக சக்தியைத் துணைக்கொண்டும், அதற்கு அடங்கி நடந்தும் செல்வார்க்கன்றிப் பிறர்க்கு எந்நெறியிலும் முன்னேற்றம் தடைப்படும். வாழ்க்கைக்கு இன்றியமையாத இவ் வுண்மைகளை உய்த்துணர்ந்து, அதற்கியைந்தவாறு ஒழுகுதலே இன்றைய உலகத்திற்குத் தலையான தேவையாகின்றது; அத்தகைய ஒழுக்கமே நிலமிசை நீடுவாழும் நயத்தக்க (விரும்பத்தக்க) நாகரிகத்திற்கு விதையாகும்.

இவ்வாறு ஒழுக முயலும் போது நமது வாழ்வே ஒரு பெரும் ஞான வேள்வி (யக்ஞம், யாகம், ஹோமம்) ஆகின்றது; அத்தகைய ஞான வேள்வியில் தொண்டின் மணம் கமழ்கின்றது. ஞானமும் தொண்டுமாகிய இவ்வேள்வித் தீயை மக்களின் உள்ளத்திலே மூட்டும் பணியையே மேற்கொண்டது நமது 'விஜயம்'. ஞானத் தொண்டே அதன் தொண்டாகும்; நாம்

ஞான சாதனம் பழகுதலும், ஞானம் பழகும்படி பிறரைத் தூண்டுதலும்—இதுவே ஞானத்தொண்டாகும். ஒவ்வொரு மனிதனது உடலும் உள்ளமும் உடைமையும் ஞான வாழ்க்கைக்கெனறே அர்ப்பணம் பண்ணப்படவேண்டும். ஞானம் பெறுதற்காகப் பற்றும் தன்னடக்கம் எனுந்தீயில் எல்லா உடலின் செயல்களையும் உள்ளத்தின் செயல்களையும் உடைமையையும் ஒருவன் ஹோமம் பண்ணுதல் வேண்டும். அத்தன்னடக்கமாவது : தனது கருமங்களின் பலன்கள் மீதும் அக்கருமங்கள் மீதும் எழும் பற்றை அவிக்க முயலுதலும், தானே அனைத்திற்கும் கருத்தா என்ற எண்ணத்தை தவிர்த்து, இறைவனே தன்னையும் பிறரையும் ஆட்டிவைக்கின்றான் என்பதை அறிந்து, அவனது அருணோக்கத்திற்கு முரணாது இசைந்து ஒழுக முயலுதலுமாம். இம முயற்சியோடு செய்யப்படும் செயல்கள்யாவும் வேள்வியேயாகும். இவ் வேள்வி நெறியைப் பின்பற்றுவதால் மனம் வரவரத் தூய்மையடைந்து, மெய்ப்பொருளைக்காணும் தகுதியை மேலும் மேலும் பெறுகிறது. இத்தகைய வேள்வியை மக்கள்பலரும் இயற்றுதலால், ஊரும், நாடும் உலகமும் செழிப்படையும், சீர்மல்கும், சாந்தியையும் இபத்தையும் துய்க்கும்.

இவ்வேள்வியிலே மக்கள் ஈடுபடுவது எளிதான செயலன்று என்பதை யாம் அறிவோம். செங்குத்தான ஒரு மலையில் ஏறுவது போன்ற சிரமம் மிக்க செயலாகும் இது. உலகப்பற்று எனும் பெருஞ்சக்தி மக்களின் உள்ளத்தைக் கீழ்நோக்கி யாண்டும் இழுத்துக்கொண்டேயிருப்ப, அதை எதிர்த்தும் மீறியும் மேல் நோக்கிச் செல்லுதல் அருமையானதேயாகும். ஏனெனில் இந்நெறியினைச் சிந்திப்பாரும் விரும்புவாரும் சிலரே; விரும்புவாருள்ளும் அந்நெறியிற் செல்ல முயலுவார் அதனினும் சிலரே ; அம்முயற்சியில் வெற்றி பெற்று, அனுபூதியென்னும் குன்று ஏறி நிற்பார் அவரினும் மிகமிகச் சிலரேயாவர். பெரு வலிமை படைத்த உலகப் பற்றுஎனும் சக்தி மக்களை ஆட்படுத்திவருவது அங்கிங்கெனதபடி எங்கும் காணும் நிகழ்ச்சியேயாகும். நினைவு, சொற் செயல்களை ஞான லெக்ஷியத்தின் ஆட்சிக்கு உட்படுத்த முறையாகவிடாது முயன்று வருபவர் மிகச் சிலரேயாவர். தற்காலம் உலகியற் சார்பு என்னும் பேரலை மனித வாழ்க்கையின் பற்பல துறைகட்குள்ளும் புகுந்து பரவிவருகின்றது ; ஞான வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கைகளையே பாழாக்கி, உலகியல் செறிந்த வாழ்க்கையோடு அவற்றைத் தாராளமாக விரவி, ஞானத்தின் உருவும் இயல்பும் தெரியவொண்ணதபடி வாழ்க்கையை மாற்றிவிடுகிறது. உலகியற் சார்பிற்கே பெரும் வெற்றி உண்டாகும் வண்ணம், ஞானவாழ்வு உலகியல்வாழ்வு எனும் இரண்டிற்கும் உள்ள நிலையான வரம்புகளைப் பெயர்த்து அழித்து உலகியல்வாழ்வின் எல்லையை விரியச் செய்து இரண்டிற்கும் உள்ள வேறுபாடு கற்பனையே என்றும் போலி அறிஞர் பறையறைந்து வருகின்றனர். ஞானவாழ்க்கை உலகியல் வாழ்க்கைக்குக் கட்டுப்பட்டு மனம் பொருந்தி வாழ இசைந்தாலன்றி, அதற்கு உலகிலே இருப்புக்கும் திண்டாட்டம் நேரவேண்டும் என்றும் விரும்புவார் பலர்.

ஆனல் இத்தகைய முயற்சியினல் ஞான வாழ்க்கை இருக்க இடமின்றி ஒழிந்துவிடும் என்று எதிர்பார்ப்பது வீண். ஏனெனில் மெய்ஞ்ஞான வீரர் பலர் ஆங்காங்கே இந்நாட்டில் தோன்றி, உலகியல் வாழ்வின் புரையோடிய தன்மையையும் ஞானவாழ்க்கையின் கருதரிய அனுபூதி மாட்சியையும் தெள்ளத் தெளிரத் தமது வாழ்வாலும் உபதேசத்தாலும் எடுத்துக் காட்டுகின்றனர் ; வாய்வீரம் பேசும் போலி மனிதர் ஆயிரவர் கூடிப் பழித்தாலும் ஒரு மெய்ஞ்ஞானியின் நெஞ்சத்து அச்சமின்மையும் அமைதியும் இன்பமும் அருளும் சிறிதும் வாடாது ஒளிரும் ; அவ்வியல்புகள் எதிர்ப்போரையும் வலிய இழுத்து, வியப்பிற்குள் ஆழ்த்தி, ஒருவாறு தம்பால் ஈடுபடுத்தும். உலகப்பற்றின் மயக்கத்திற்கு உள்ளாகும்போதும் மனிதர் கலக்கமின்றிய அறிவொடு ஞானநெறியிலே செல்வதாகத் தம்மை மதித்துக்கொள்ளுதல் ஆச்சரியமேயன்று ; அது மாயையின் அளப்பரும் சக்திக்கு ஒரு சான்றேயாகும். ஞானத்திற்காக முயல்வார் அனைவரிடத்தும் எக்காலத்தும் எந்நாட்டிலும் அறுதி நிலையை அடையும் வரையிலும் மாயையெனும் மங்கை தனது வஞ்சனையையும் தந்திரத்தையும் பயன்படுத்தித் தன் வலைக்குள் அன்னுரை வீழ்த்த அரும்பாடு படுவதும் பேருண்மையே. ஆனல் தற்காலக் கல்வியறிவின் திறனே உலக வாஞ்சையில் விளையும் மதி மயக்கத்தினின்றும் மக்களைக் கண்விழிக்கச் செய்யாது போவதன்றி, அம்மோகத்தையே விவேகமென வாதாடி நிலைநாட்ட முயலும் ஓர் இறுமாப்பையும் அவர்கட்கு ஊட்டியுள்ளது, இதனல் மாந்தரைப் பிறவிப் பெரும் பாறையொடு பிணைக்கும் இருப்புச் சங்கிலிகள் உரன்பெற்று உருக்குச் சங்கலிகளாகின்றன. தற்காலப் பண்பாட்டின் இவ்வஞ்ச

னையை எடுத்துக்காட்டி மக்களைக் காப்பதே நமது முதற்கடமை.

இரண்டாவது கடமையாவது: மேற்றிசை நாடுகள் ஒவ்வொன்றிலும், தவருன ஒரு தேசாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய வாழ்க்கைக் கட்டடத்தை எழுப்பியுள்ளனராதலின், அந்நாடுகள் ஒவ்வொன்றிற்கும் அவ்வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றி எச்சரித்தல் அவசியமாகின்றது. அம்மாதிரியான தேசிய வாழ்க்கையமைப்பினுல் அந்நாடுகட்கும் பிற நாடுகட்கும் நேரும் கேடுகளை நாம் கண்கூடாக இன்றைய ஐரோப்பாவில் காண்கின்றேமல்லவா? அந்நாடுகளின் உலக வாழ்க்கைச் செழுமைக்கு நடுவேயும் அதனையரித்து வரும் கவலையும் போரச்சமும் பொருட்செலவும் அரசியல் தந்திரமும் ஆங்கு உறையும் மக்களை அழிவெனும் படுகுழியில் தள்ளக்காத்திருக்கின்றன. போர் வெறி பிடித்த அம்மக்களைத் தம் அழிவை நோக்கிச்செல்லாது தடுத்துக் காத்தல் ஓர் அற்புதத்தையே நிகர்க்கும். அங்ஙனம் தடுத்து வைப்பினும், அம்மக்கள் உலகச்சார்பின் கவர்ச்சிக்கும் அரசியல் வெறிக்கும் வசப்பட்டுப் பண்டுபோல் தேசிய வாழ்க்கையை, பொன்னையும் போகத்தையும் பெருக்கும் நெறியிலே படரவிடுவதைத் தவிர்க்க மாட்டார். மனிதனிடத்து மறைந்துள்ள அசுரத்தன்மை தேசிய வாழ்க்கைக்குரிய அரசியல் இலக்ஷியத்தைக் கையில் வாளாக வந்தி நாடெங்கும் பவனி வந்தமையால் விளைந்ததென்? சிலுவையிலே மக்களை உய்வித்தற்காக உதிரத்தையும் உயிரையும் சிந்திய இயேசு நாதர் தமது திவ்விய வாழ்க்கையால் புகட்டிய உயர்ந்த பண்பாட்டையெல்லாம் சிதைத்து விட்டதொன்றேயாம். போர் தெய்வச்செயலால் நின்று விடினும், அந்த அசுரனது வாளிற்கு இரையாகாது தப்பியுய்ய வழியில்லை. இந்நிலையில் ஞான இலக்ஷியத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்றிசையார் தனிவாழ்க்கையையும் ஸமூக வாழ்க்கையும் ஒழுங்காக அமைக்கும் முறையின் அவசியத்தைப் பரதநாட்டினின்றும் உணர்ந்து, அம்முறையைப் பின்பற்றித் தீவிரமாக முயலுதல் வேண்டும். ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் ஐம்பது ஆண்டுகட்கு முன்பே மேற்றிசை நாட்டினர்க்குக் கூறிய எச்சரிக்கையை அவர்கள் இன்னும் புறக்கணித்து வருகின்றனர். இருபெரும் உலகப்போர்கள் மூண்டு, வெற்றியடைந்தோரையும் தோல்வியடைந்தோரையும் பிறரையும் ஒருங்கே வெவ்வேறு வழியால் நலியச் செய்த பின்னும், இனியேனும் உய்வடையப் பாடுபடுவோம் என்னும் மன உறுதி ஆங்கே எழுந்த பாடில்லை. நமது பரதமா நாடு அந்நாட்டினர்க்குச் செய்யவேண்டிய பணி இத்துறையிலேதான் உள்ளது. மேலையுலகம் அப்பணியை எதிர்பார்ப்பதும் நம்மிடத்திலிருந்தே தான்.

நமது நாட்டிற்கே செய்தற்குரிய வேறொரு பணியும் மூன்ருவது கடமையாக உள்ளது. மேற்றிசைக் கல்வியை விரும்பிப்பருகி அப்பண்பாட்டின் மோகவலையிற் சிக்கினர் நமது நாட்டின் ஸமூக வாழ்க்கையில் ஒற்றுமையின்மையால் வரும் கேடுகளை நீக்குமாறு மேற்றிசையாரது ஸமூக வாழ்க்கையமைப்பினை இங்கும் புகுத்த வேண்டுமெனப் பரப்பரப்படைகின்றனர். இம்மைச் செல்வங்களின் வறுமையால் நலிவுபடும் நாம் மேற்றிசையாரது அரசியல் அமைப்பினையும் உலகியற் சார்பையும் ஆதரத்திேெடு பெற்ருலன்றி இறந்துபடுவோம் என்கின்றனர். அரசியல் துறையில் பெறும் சுதந்திரம் ஒன்ருல் மட்டுமே உலக வாழ்க்கையில் செழிப்பும் இன்பமும் கவலையின்மையும் வந்தமையும் என்றும், நமது நாடு நாகரிக உலகத்தின் முன்னணியில் விளங்கும் என்றும் பறைசாற்றுகின்றனர். ஆனல் நமது தேசிய வாழ்க்கையமைப்பிற்கு உயிராய் இலகும் ஞான இலக்ஷியத்தை நாம் கைவிட முயலுவோமாயின், நாசமே நமக்குக் கதியாகும் என்று கர்ச்சித்த வீரஞான கேசரி விவேகானந்தரின் எச்சரிக்கையை நாம் மறப்பது நன்றன்று. நமது உயிர் நிலைக்குத் தீங்கோ மெலிவோ வராதவரை, பொருளாதாரம் அரசியல் முதலாய எத்துறையிலும் நமது தேசிய வாழ்க்கைத் தரு இனிய கனிகளை நல்கும் என்பதில் ஐயமில்லை. ஞான வாழ்வெனும் வேரிலே நீரூற்றிப் போற்றி வரும்போது, அரசியல் வாழ்வெனும் கிளையும் உரன் பெற்றுப் பொலிவது திண்ணம். உண்மை இதுவாகவும், சற்றே அரசியல் சுதந்திரத்தை வாழ்க்கையில் சுவைத்த நம்மவர் பிறநாட்டினரின் வரலாற்றையும் நமது நாட்டின் வரலாற்றையும் மறந்து அரசியலை ஆதாரமாகக் கொண்ட தேசிய வாழ்க்கையமைப்பினை நமக்கும் வற்புறுத்தியளிக்கத் தாழாது முயற்சித்து வருகின்றனர். இது பேதமையன்றிப் பெரும் தீதாகும். அரசியல் துறையில் தன்னுட்சி பெறுவதே நோக்கமாகும்போது ஞானவாழ்வும் அதற்கு அடங்கியே நிகழும் அவசியம் தானகே வரும். அதனல் ஞானவாழ்வு தன்னீர்மை குன்றிக் கெடும். ஞானவாழ்விற்கு மெலிவு வரவே, ஏனைய வாழ்க்கைத் துறைகள் பலவும் வளஞ்சுருங்கி வறட்சி எய்

தும். இதற்கு மாறாக ஞானத்துறையில் தன்னாட்சி பெறுவதே (ஞான சுதந்திரம் பெறுவதே) தலை நோக்கமாயின், அதற்காகச் செய்யும் முயற்சியால் சமூக வாழ்க்கையில் ஒற்றுமையும் வீரியமும் மலியும்; தேசிய வாழ்க்கையெனும் மரத்தின் கிளைகள் பலவும் செழித்து வளரும்; இம்மைச் செல்வங்கட்குக் குறைவின்றியே, இணையற்ற ஞானச் செல்வமும் கூடி வரும். அப்போதுதான் பரதமாநாடு பண்டைய மாண்பினை எய்தி, உலகனைத்திற்கும் அமைதியையும் இன்பத்தினையும் அளிக்க வல்லதாகும். ஒழுங்கமைப்பின்றிச் சிதறுண்டு கிடக்கும் நமது சமூக வாழ்க்கையை நமக்கு இயல்பான ஞான சுதந்திர அடிப்படை மீது எழுப்பி உறுதியாக அமைக்குமாறு தூண்டுவதே இற்றைக்குச் செய்யவேண்டிய பெரும் பணியாகின்றது, ஞான இலக்ஷியத்தை மக்கட்கெல்லாம் வற்புறுத்தலும், மேலை நாட்டினர்க்கு அவரது சமூக வாழ்க்கையமைப்பின் அடிப்படையிலுள்ள தவற்றினைப் புலப்படுத்துவதும், நமது நாட்டினர்க்குச் சீர்குலைந்த சமூக வாழ்க்கையமைப்பைச் சீர்திருத்துமாறு ஞான இலக்ஷிய அடிப்படையை வலியுறுத்துவதும்-இம்மூன்றுமே இந்நாளைக்கு இயற்ற வேண்டிய அவசியமான பணிகளாகின்றன. இப்பணிகளை இயன்றவரை செய்ய முயல்வதே 'விஜயம்' தொடங்கியுள்ள ஞான வேள்வியாகும். இவ்வேள்வியிலே மகிழ்ந்து கலந்து, பல்வகை நலன்களையும் நாடும் நகரமும் உலகமும் பெற்று உய்யுமாறு உதவச் 'சேரவாரும் ஜெகத்தீரே!'

மஹான் அரவிந்த யோகி

கடந்த டிசம்பர் 5ம்தேதி செவ்வாய்க்கிழமை இரவில் புதுச்சேரியில் நாற்பதாண்டு காலம் உறைந்து வந்த மஹான் அரவிந்த யோகி மண்ணக வாழ்வை நீத்தனர். அதனால் புதுச்சேரி ஞான ஒளியை எங்கணும் வீசிவந்த ஒரு கலங்கரை விளக்கத்தை இழக்கலாயிற்று; பாரத நாடு தனது தவப்புதல்வர் ஒருவரை இழக்கலாயிற்று; உலகமும் ஓர் உன்னத ஞானவாழ்விற்கு வழிகாட்டியாய் அமைந்த ஓர் அறிஞரை இழக்கலாயிற்று. அவர் தற்கால இந்தியாவின் மிக மேலான தத்துவ அறிஞர்களில் ஒருவர்; வேதங்கட்கும் கீதைக்கும் புதுமுறையிலே பொருள் கூறி, ஓர் இனிய விரிவுரை எழுதியவர்; நயமிக்க கவிகளையும் நாடகங்களையும் இயற்றியவர்; மறைந்து கிடந்த ஒரு யோக முறையைப் புதுப்பித்துப் பழகியவர்; இந்திய நாட்டின் தனிச்சீர்மையை உணர்ந்து, அதற்குச் செவ்விய முறையில் பணியாற்ற முன்வந்த ஒரு தீரர். அவரை டாக்டர் இராதா கிருஷ்ணன் 'இக்காலத்திய உயர்வற உயர்ந்த மேதாவி' என்பர். ரொமெயின் ரோலண்டு என்பவர் அவரை 'இந்நாளிலே தோன்றினவர்க்குள் மிக ஆழ்ந்த சிந்தனையாளர்' என்பர்.

அவரது வாழ்க்கையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி, அவரது கல்வியையும் உத்தியோகத்தையும் பற்றியது, 1872 முதல் 1906 வரை; இரண்டாம் பகுதி, அவரது தேச சேவையையும் சிறைவாசத்தையும் பற்றியது, 1906 முதல் 1910 வரை; மூன்றும் பகுதி அவரது யோக சாதனத்தையும் ஆசிரமப் பணியையும் பற்றியது, 1910 முதல் 1950 வரை.

ஸ்ரீ அரவிந்த கோஷ் என்பார் கல்கத்தாவிலே 1872ம் ஆண்டு ஆகஸ்டு 15ம் தேதியன்று பிறந்தார்; தமது ஏழாவது வயதிலே தமது தமையன்மார் இருவரோடும் இங்கிலாந்து சென்று, பதினான்கு ஆண்டுகள் அங்கே வாழ்ந்தார். இலண்டனில் உள்ள பால் போதகரின் பள்ளிக்கூடத்தும், கேம்பிரிட்ஜில் அரசரது கல்லூரியிலும் கல்வி பயின்று வந்தார். 1897ம் ஆண்டில் ஐ.ஸி.எஸ். பரீக்ஷையில் தேறினாரெனினும், குதிரையேறும் சோதனையைப் புறக்கணித்தமையால் அதில் தேர்ச்சியடையாது முடிவில் பட்டம்பெறாது போயினர். மேற்றிசைக் கல்வியை ஆர்வத்தொடு பருகி, தத்துவநூல், வரலாற்றுநூல், விஞ்ஞான நூல் முதலியவற்றையும் ஐயந்திரிபறக் கற்றார்; அன்றியும் பரதமா நாட்டின் தனிப்பண்பையும், அதன் சரித்திரப் போக்கையும், அதன் நிலையையும் ஊன்றி ஆராய்ந்து உணர்ந்து கொண்டார். 1893ம் ஆண்டில் இந்தியாவிற்கு மீண்டு, பரோடா சமஸ்தானத்தில் 13 வருடம் உத்தியோகம் பார்த்து வந்தார். இவ்வமயம் தமது பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படையை அமைத்துக் கொண்டார்; வடமொழிப் பயிற்சி பெற்றார்; தற்கால இந்திய மொழிகள் சிலவற்றையும் கற்றார்; இந்து மதத்தின் பெருமையையும் இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்பையும் உணர்ந்தார். 1905-ல் வங்காளப் பிரிவினை நிகழ்ந்த போது, அவரது மனம் புண்பட்டது; தேசிய இயக்கத்திற் சேர்ந்து பணிசெய்ய ஒரு பெருங்கிளர்ச்சியை அது ஊட்டியது.

1906-ம் ஆண்டில் வங்காளப் பிரிவினையை எதிர்த்துப்போராடத் தொடங்கினர்; அது முதல் தேசிய இயக்கத்தில் முனைந்து ஈடுபடலானர். சில காலம் வங்காளத் தேசிய கல்

லூரித்தலைவராய் அமர்ந்திருந்தார். புதிதாகத் தோன்றிய தேசிய இயக்கத்தை ஆற்றுப் படுத்தி வந்தார்; பூனை போலப் போராடுவதை ஒழித்து யானைபோலப் போராடுமாறு தேசாபிமானிகட்குத் போதித்து வந்தார். 'வந்தே மாதரம்' என்னும் பத்திரிகையின் முதற் பத்திராசிரியராய் விளங்கி, நாடெங்கும் புத்துயிர்ஊட்டினர். 1908-ம் ஆண்டிலே அலிபூர் வெடிகுண்டு வழக்கிலே குற்றவாளியாகக் கருதப்பட்டு, தனிச்சிறை புகுந்தார். ஆங்கே சிறைச்சாலையைத் தவச்சாலையாக்கி, கீதையையும் உடநிடதங்களையும் கற்கவும், ஆழ்ந்த தியானமும் யோக சாதனமும் பழகவும் தலைப்பட்டார்; சில ஞானக்காட்சிகளைப் பெற்ருர், உலகில் தமக்குரிய பணியிதுவென உணர்ந்தார். குற்றம் நீங்கி வெளிவந்ததும், 'கரும யோகி' 'தருமம்' எனும் வாரத்தாள்களை, ஒன்றை ஆங்கிலத்தும் மற்றொன்றை வங்காள மொழியிலும் தொடங்கித் தமது கருத்துக்களை வெளியிட்டு வரலானர். பின்னர் அரசாங்கத்தார் அவரை மீண்டும் சிறையிலிடும் உறுதி கொண்டதை அறியப்பெற்றதும், சந்திரநகோர் எனும் பிரெஞ்சு பிரதேசம் சென்று, அங்கிருந்து 1910 ஏப்ரல் 4-ந் தேதியன்று புதுச்சேரிக்கு ஏகி, ஆங்கில அரசாங்க சட்டத்தினின்றும் உய்வு பெற்ருர். அதோடு அவரது அரசியற் போராட்ட வாழ்வு ஒழிந்தது; அவர் மனதை உண்முகமாக்கி யோக வாழ்க்கையில் மூழ்கினர். 1914 முதல் 1921 வரை 'ஆரிய' என்னும் பத்திரிகையைச் சிறந்த முறையில் யாவரும் வியக்கப் பதிப்பித்து, தமது அரும் பெரும் சிந்தனைச் செல்வத்தை உலகினருக்கு நல்கி வந்தார். அவரது யோக வாழ்க்கையின் மணத்தையும் இன்பத்தேனையும் ஓரளவிற்கு நேரில் உணர்ந்த சாதகர் பலர் அவரைச் சுற்றி வண்டென மொய்க்க ஆரம்பித்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் அவரது யோக வாழ்வின் மேன்மையைக் கருதி அனைத்தையும் துறந்து, அவரது வழித்துணையை நாடி அவரது இருப்பிடம் சேரலானர். இதனல் அரவிந்த ஆசிரமம் தோன்றி வளரலாயிற்று. இந்தியரும் அன்னியரும் ஆங்கே குழுமலானர். மஹான் அரவிந்தர் போனவிரதம் பூண்டிருந்தனரேனும், அவரது வாழ்வும் உபதேசமும் பலர்க்கும் பயன்படலாயின; சாதகர் பலரும் அவரைப் பின்பற்றி வாழ முயன்று வந்தனர். அவரது ஞான ஒளி சென்ற ஆண்டு டிசம்பர் ஐந்தாம் தேதிவரை ஊனுடலிலும் ஜொலித்து வந்தது.

அவ்வொளியைத் தாங்கிய உடல் மறைந்ததெனினும், அம்மஹானது சீடர் அவரை இழந்ததாக நினையார். பூரண யோகம் பயின்றும் போதித்தும் வந்த அப்பெருங்குரவரது இருப்பைப் பண்டுபோல் தீவிரமாகவும் நேராகவும் அனுபவித்து வருவதாகவே உணர்கின்றனர். யோக வாழ்க்கையில் அவரது துணையைப்பெற்று மகிழ்ந்து வந்த அன்பர் அவரது உடல் வாழ்வை இழந்து இடருழப்பரேனும், நெஞ்ச உலகிலே அவரைப் பிரிந்துவிட்டதாக உணரவில்லையென்று உரைக்கின்றனர். அவருக்குப் பிற்காலம், அவரது யோக வாழ்விற்குப் பேருதவியாயிருந்த 'மீராம்பிகா' என்னும் பெயர் பூண்ட பிரெஞ்சு அம்மையார் அவரது திருப்பணியைத் தொடர்ந்து இயற்றி வருவார் என்பர். அரவிந்தயோகியின் இயங்கு சக்தி வடிவம் அவ்வம்மையார் என்பது அன்பர்களது துணிபு. இந்த அன்பர்களின் நெஞ்சார்ந்த அனுபவமும் உரையுமே மஹான் அரவிந்தரின் அசாதாரண மாண்பிற்குச் சான்ருகுமன்ருே?

இப்பெரியாரது உடலின் தோற்றத்திலே காண்பாரது நெஞ்சத்தைச் சிறைப்படுத்தும் அரச காம்பீர்யம் ஒளிர்ந்தது; அது அவரது நடையுடை பாவனைகள் ஒவ்வொன்றிலும் புலனுயிற்று. இனிமையும் மென்மையும் வாய்ந்த அவரது குரல்கேட்டோர்க்கு இன்பமூட்டும் எனினும் உறுதியாயிருக்கும். அவரது தோற்றத்திலே அசாதாரணத் தன்மை புலப்படுமாயினும், அவரது தாழ்மையும் உதாரமும் இரக்கமும் தாக்ஷிண்யமும் அதை மறைக்க முயலும். அவர் எப்போதும் உயர்ந்த ஞான பூமியிலே உலவுவராயினும், ஒரு கணத்தில் தணிந்த நிலைக்கு இறங்கிக் கொள்வர். ஒருவரிடமும் அவர் தம் அதிகாரத்தைச் செலுத்தமாட்டார், அவரவர்க்கு சுதந்திரத்தை அளிப்பார். அன்பின்மிகுதியால் ஒரு பூனைக்கும் அவர் தொந்தரவளிக்க விரும்பார். அவர் பிறர்க்கு உதவியளிக்க முயலும்போது, பிறரிடத்திலுள்ள சக்தியை எழுப்பி, சரியான முடிவுக்குத் தாமே வரும் திறமையை ஊட்டுவார். பிறமக்களோடு பழகும்போது, அவரவரதுநிலைக்குக் கீழிறங்கி, அவரவரது உணர்திறனுக்கு ஏற்றவாறு தமது பெருமையையும் சக்தியையும் தெரிவித்து வந்தார்.

மஹான் அரவிந்தரைப் பற்றி ஒரு வார்த்தையிற் கூற விருப்பமுண்டாயின், அவரை முழுயோகி என்பதே போதும். அவர் ஆரம்பத்தில் தேசிய வாழ்க்கையில் புரட்சியை உண்டுபண்ணிச் சுதந்திரம் பெற எண்ணினரெனினும், விரைவில் ஞானசாதனம் பழகும் மாபெரும் யோகியாக மாறிவிட்டார். 'ஸர்வம் பிரம்ம மயம்' என்பது உண்மையா

தலின், வாழ்க்கையில் எத்துறையில் எவ்வித முயற்சியில் ஈடுபடினும், அதன் வழியாகவே ஞான சாதனம் பழகி, மெய்ப்பொருளைக் காணுதல் இயலும்; இதனால் வாழ்க்கையை உலகியல் வாழ்க்கை ஞான வாழ்க்கையென இருபிரிவாக்குதல் வாழ்க்கையிலுள்ள யாதேனும் ஒரு முயற்சியைப் பொறுத்ததாகாது, வாழ்பவனது மன நிலையை மட்டும் சார்ந்ததாகும். யோகமாவது, எத்துறையில் ஒருவன் கருமம் புரிந்துவரினும், பரம் பொருளோடு மனத்தை ஒன்ற வைத்தற்காகச் செய்யும் முயற்சியின் வெற்றியேயாகும். இந்த யோக இலக்கணத்தை ஒப்புக் கொள்வோமாயின், ஸ்ரீ அரவிந்தர் எல்லாவகையிலும் யோகியாகவே விளங்கினர். ஞானத் துறையில் மட்டுமேயன்றி, அரசியல் துறையிலும், தத்துவ நூல் துறையிலும், கவிகள் எழுதும் துறையிலும், கலைப்பயிற்சித் துறையிலும் அவர் யோகியாகவே வாழ்ந்தார். பல பகுதிகளும் ஒன்றுயிணைந்த முழுமையே வாழ்வு, அதனைப் பகுத்தல் நன்றன்று என்பர் அவர். அரசியல் துறையில் அவர் போதித்த உபதேசத்திலும் யோகமணமே கமழ்ந்தது; அவர் தேசப்பணியை இயற்ற முன் வந்த இளைஞர்க்கு ஏனைய போதனைகளோடு யோக நெறியிற் பயிற்சியையும் அளித்து வந்தார். ஒருவன் தன் மனத்திற்குள்ளே ஆழ்ந்து மூழ்கிச் செல்வானாயின், உரை மனமிகுந்த சக்தியும் அழகும் ஆனந்தமும் உறையும் இடத்தை அடைந்து, அத்திவ்விய சக்திக்குக் கருவியாவான்; அப்போது சலிக்கும் தன்மையமைந்த நமது மனம் ஒரு நிலைப்பட்டு, ஒழுங்காகப் பிழையறத்தொழில் புரிந்து, உள்ளொளியைக் கண்டு அவ்வொளியோடு ஒன்றித்து நிற்கும். ஞான வாழ்க்கையில் நாம் முன்னேறி, மேலும் மேலும் ஆன்ம சக்தி விகாசமடைந்து வருவோமாயின், நாம் ஸித்த புருஷராவோம்; அப்போது இவ்வுடலிலே திவ்விய வாழ்க்கை கைகூடுவதாகும். நமது ஆன்மா, தெய்விக சக்தி உறையும் பூமியை நண்ணியதும், நாம் ஜீவன் முக்தராவோம்; அப்போது தெய்விக சக்தி உயர்ந்த பூமியிலிருந்து கீழிறங்கித் தூல உலகிற்கு வந்து, தூல உலகத்தையும் தெய்வமயமாக்கும். முக்தியடைந்த புருஷர், உலகங்கட்கு அப்பால் ஒளிரும் பரம்பொருளை அடைந்த பின் உலகத்தை உயர்த்தும் தொழிலில் ஈடுபடுவர்; தெய்விக சக்தியை உலகத்திற்குக் கொணர்ந்து பரப்பி ஊட்டி, மண்ணுட்டையும் விண்ணுடாக்க முயலுவர். யோகத்தின் நோக்கமாவது: தெய்வத் தன்மையையும் உயர்வற உயர்ந்த தெய்விக ஒளியையும் சாந்தியையும் சக்தியையும் கீழுலகிற்குக் கொணர்ந்து அதையும் மாற்றியமைத்தலேயாம். ஸ்ரீ அரவிந்தரே பின்வருமாறு தமது யோக இலக்ஷியத்தைப்பற்றிக் கூறுகிறார்: "வேதத்தில் கூறப்பட்டுள்ளது போன்றே ஒரு ரித-ஸத்யம் உண்டு; இதை யான் திவ்விய மனமென்பேன். இத்திவ்விய மனத்தில் பூரண அறிவு உள்ளது; அதை யாம் தேடவேண்டிய அவசியமில்லை, அம்முயற்சியில் தோல்வியடைய வேண்டிய அவசியமுமில்லை. உபநிடதங்களில் மனத் தத்துவத்திற்கு மேலே அடுத்த உயர்ந்த படியில் அறிவுத்தத்துவம் ஒன்று உள்ளதாகச் சொல்லப்படுகிறது. நமது ஆன்மா அந்தப்படிக்கு ஏறி, அதன் வாயிலாக ஞானவாழ்வின் பூரண ஆனந்தத்தைப் பெற வேண்டியிருக்கின்றது. இயற்கையடைந்துவரும் பரிணாம முறையில் அடுத்த உயர்நிலை இதுவே இந்நிலையை எய்தியதும், இங்கும் பூரணவாழ்வு கைகூடும். உடலில் உள்ளபோதே பூரணமான ஞானவாழ்வு வாழக்கூடும். அன்றேல் உடலே பூரணமடையவும் கூடும். அப்போது பூவுலகிலே தெய்விக வாழ்வு நடைபெறுவதைப்பற்றிக் கூறலாகும்...............மனித ஆன்மா பரம்பொருளை நோக்கி ஏறுவது அவசியம் தான்; ஏனெனில் அதுவே உயர்ந்த உண்மை; ஆனால் பரம்பொருளும் அதன் சக்தியும் இவ்வுலகிற்கு இறங்குதலும் இயலும்; அப்போது தான் சடவுலகம் இருப்பதற்கு ஒரு நியாயம் அறியப்படும்; படைப்பின் உட்கருத்தும் தெய்விக நோக்கமும் அப்போது விளங்கும், வாழ்க்கைப் புதிர் தீர்க்கப்பட்டதாகும். கீழையுலகமும் மேலையுலகமும் மிகவுயர்ந்த மிகப் பெரிய இலக்ஷியத்தை அடையும் முயற்சியில் இணைந்து நிற்கும்; ஆன்மதத்துவம் சடத்தத்துவத்தைத் தழுவி நிற்கும்; சடப்பொருளிலும் அதற்குரிய உண்மை நிலையும் எல்லாப்பொருள்களிலும் கரந்துறையும் பரம் பொருட்டன்மையும் புலனாகும்.''

அரவிந்த யோகி உலகிற்கு உபதேசித்த உண்மைகள் பின் வருவன: (1) 'தெய்விக வாழ்வு' என்ற பெரு நூலை எழுதி, அவர் தமது புது சித்தாந்தம் இன்னது என்பதையும், தமது யோக வாழ்விற்கு ஆதாரம் அதுவாவதையும் விளக்கினர். அத் தெய்விக வாழ்வைப் பெறுதலே பூரண யோகத்தின் பயன் என்பர். அவரது சித்தாந்தம் அவரது அனுபவத்தையும் சுருதியையும் யுக்தியையும் பிரமாணங்களாகக் கொண்டது; அம்மூன்று பிரமாணங்களாலும் அதை விளக்குகின்றார்.

(2) பூரணயோகமாவது கரும, ஞான, பக்தி யோகங்கள் மூன்றும் ஒன்றாக இணைந்து நிற்கும் முழுமையாகும். அம்மூன்றும் மூன்று வெவ்வேறான நெறிகளும் அல்ல, ஒரே ஞான சாதனத்தின் மூன்று வகைகளேயாம். (3) 'கீதையைப் பற்றிய கட்டுரைகள்' என்னும் ஒரு நூலை அவர் இயற்றி, கீதையின் கருத்தை நன்றாக விளக்கி யுள்ளார். ஈசாவாஸ்ய கடபிரச்ன உபநிடதங்கட்கு அவர் விரிவுரை யெழுதி, தமது போதனைகள் உபநிடதங்கட்கு முரணாது, அவற்றை விளக்குவதை எடுத்துக் காட்டினார். (4) மேலை நாட்டார் அறியாமையால் குறை கூறும் நமது இந்தியப் பண்பாட்டின் ஆதாரத்தையும் அதன் அழியாப் பெருவலிமைக்கு மூலமாயிருக்கும் உண்மையையும் அவர்க்கு எடுத்துக் காட்டி, அதன் பெருமையைப் புகழ்வார்; அன்றியும், அப்பண்பாடு சீர்குலைந்த காரணத்தைவும் அது மறுமலர்ச்சியடையும் வழியையும் போதிப்பார். இந்தியா தனது சுதர்மத்திற்கு இணங்க ஒழுகி, தனது மேன்மையான விதியை நிறைவேற்ற வேண்டுமாயின் அதன் அரசியல் வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை, கலைப் பயிற்சி, கல்விமுறை முதலியவை இன்னின்ன நெறியிலே செல்ல வேண்டும் என்பதையும் போதித்தார். (5) வேத மந்திரங்களில் புதைந்துகிடக்கும் அரிய செல்வங்களாகிய மறை பொருள்களை இக்கால அறிஞர்கட்கும் புலப்படுத்தினார். ஸம்ஹிதைகளின் பெருமதிப்பிற் கேற்றவாறு, (அவற்றைக் கிரியா முறைக் கிணங்கப் பொருள் கூறுவதோடு) அவற்றின் உள்ளுறைப் பொருளாகிய மன நூல் சம்பந்தமான ஞானத்தையும் சிற்சில உதாரணங்களால் விளக்கிக் காட்டினார். இவ்வுபதேசங்களுள் சிகரமாய் விளங்கும் தெய்விக வாழ்க்கைக் குரிய பூரணயோக நெறி யுக்திக்குப் பொருத்தமாயிருப்பினும், அதற்குப் பிரமாணமோ சம்பிரதாயமோ இல்லாமையால், தாமே அந்நெறியிற் செல்ல விழைவார்க்கு வழித்துணையாய் அமர்ந்தார். இன்னும் விரிப்பிற் பெருகும் என்று அஞ்சி, அவரைச் 'செயற்கரிய செய்த பெரியார்' என்றும், பொய் வாழ்வைத் துறந்து மெய் வாழ்வை நாடிய அவரது பெருமையைக் கூறல் 'இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்றும் முடிப்போம். அவரது விழுமிய வாழ்வால் உலகம் பயனடைவதாக!

ஸ்ரீமான் சர்தார் படேலின் மறைவு

இந்திய குடியாட்சியின் துணை முதலமைச்சரான ஸ்ரீ சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 1950-ம் ஆண்டு டிசம்பர், 15-ம் தேதி யன்று காலை 9-30 மணிக்கு உடல்வாழ்வை நீத்தனர்; இத்துயர நிகழ்ச்சியால் இந்தியா ஒரு பெரும் அரசியல் தலைவரை இழந்தது என்பது மட்டுமன்று. அவர் தற்கால இந்தியாவை உருவாக்கியவரில் ஒருவர்; அதனை உறுதிப்படுத்தியவர்; சுதந்திரப் போரில் முனைந்து நின்ற சேனையின் அதிபதி, ஒரு பெருந் தியாக வீரர்; எண்ணியதை எண்ணியவாறே முடிக்கும் சங்கற்ப ஆற்றல் மிக்கவர்; ஆயினும் அன்பும் மென்மையும் ஆர்ந்த நெஞ்சினர். மகாத்மா காந்தியைப் பின்பற்றி வாழ்ந்த பெரியார், காரிய நிர்வாகப் பொறுப்பேற்று, யாவரும் வியக்கத் தமது கடமைகளைப் பற்றற இயற்றியவர். இந்திய நாட்டின் ஞானப் பெருமையை உலகம் அறிந்துய்வடைதற்கு இன்றியமையாத அரசியற் சுதந்திரத்தை நிலைநாட்ட முயன்றவருள் முன்னணியில் நின்று தொண்டு புரிந்த இப்பெரியாரது ஆன்மா சாந்தியடைவதாக!

கதிர் வணக்கம்

காலை இளஞ்சுடரே! — எழில்
காந்தும் தவக்கதிரே — வானை
வேலை யணைந்துபெற்ற — தூய
விண்ணமு தப்பழமே! 1

வையகம் யாவினையும் — வாட்டும்
மையிருள் அத்தனையும் — ஒரு
கைந்நொடிப் போதினிலே — ஒழியக்
காய்ந்தி டும்சுட ரே! 2

ஈனப் பகையிரு ளில் — அகப்பட்(டு)
ஏங்கித் தவிக்குமெனை — நின்
ஞானச் சுடர் விழியால் — விடுவித்து
ரட்சித் தருள்கதி ரே! 3

நெற்றித் திருவிழி யில் — சிந்திடும்
நேர்மைச் சுடர்ப்பொறி யால் — எனைப்
பற்றிய காமுக னை — எரித்துப்
பாலித் தருள் கதி ரே! 4

செவ்விளம் புன்னகை யில் — உதிரும்
தெய்வ மணிக்கதி ரால் — எனைக்
கவ்வும் சினவிரு ளைக் — கணத்தில்
காய்ந்திடு வாய்சுட ரே! 5

பொன்னின் திருமுகத்தில் — பொலியும்
பூரணப் பேரொளியால் — எனைத்
தின்னும் பகையிரு ளை — நொடியில்
தீய்ந்தொழிப் பாய்கதி ரே! 6

தெய்வத் திருமுடி யில் — திகழும்
சீர்மை மணிக்கதி ரால் — எனைப்
பிய்த்திடும் பொய்யிருளை — வேருடன்
பேர்த்தெறி வாய்சுட ரே! 7

வீரத் திருக்கழ லில் — கனன்றிடும்
வெற்றி மணிச்சுட ரால், எனைக்
கோர முடனெதிர்க் கும் — அகந்தையைக்
கொன்றிடு வாய்கதி ரே! 8

— பரம்ஹம்ஸ தாஸன்.

விவேகானந்த வைபவம்

1. அறிந்தும் அறியோம்.

ஆதித்யனை அறியாதார் அவனியில் எவரும் இல்லை. ஜீவராசிகளுக்கெல்லாம் உயிர் தருகின்றவன் தினகரனே ஆவான். சூரியன் ஒடுங்கி மறைந்து போனால், புவிமீது வாழ்வென்பது சூன்யமாகி விடும். பாஸ்கரனைக் கண்டால் தான் நமக்குப் பொழுது புலர்கின்றது. பகலோனுடைய ஒளியும் வெப்பமுமே நமது இருப்புக்கு ஆதாரமான விஷயங்களாகும். அவனது வெய்யில் எவ்விதமான வேற்றுமையும் இன்றி எல்லாப் பொருள்களின் மீதும் காய்கின்றது. அவனது கிரணங்கள் ஸ்பர்சிக்காத இடமே இல்லை. பூமியே சூரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கிரகம் தான். இரவினில் பூமியை மகிழ்விக்கும் மதியும் கதிரவனுடைய காந்தியின் பிரபாவமேயாகின்றது. இவன் தான் சூரியன் என்று ஒருவர் மற்றொருவருக்குச் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை. அவன் சுயப்பிரகாச வடிவினன்.

ஆனாலும் ஆதித்தனை உண்மையில் அறிந்தவர் எவருமேஇல்லை. சூரியன் நமக்கு வெகு தொலைவில் உள்ளான். அவனுக்கும் நமக்கும் இடையில் 9 கோடி மைல்கள் இடைவெளி இருப்பதாக வானசாஸ்திரிகள் கணக்கிட்டுள்ளனர். வினாடிக்குப் பல்லாயிரம் மைல்கள் பாய்ந்து வருகின்ற ஒளி அவனிடமிருந்து நமக்கு வந்துசேர 8 நிமிஷ நேரம் ஆகின்றது. சூரியனுடைய சோபையை இவ்வளவு எட்டநின்றே நம்மால் சகிக்கமுடியாது போகின்றது, அவனை ஒரு சிறிதுநேரம் உற்று நோக்க நமது நயனங்களுக்குத் திறனில்லை. கோடை வெப்பத்தைத் தாங்கி நிற்கவும் நாம் சக்தியற்றவர்களாகின்றோம். அவனிடம் நெருங்கிச்சென்று அவனதுபெருமையைச் சிறிது விரிவானமுறையில் அறிந்து கொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை. ஒரு சிறிதே அவனை நெருங்கினோமானாலும் நாம் வெந்து மாய்வோம். சூரியனுடைய உஷ்ணம் 10,000 டிகிரிக்கு மேலாக இருக்கலாமென்று கூறுகின்றனர். சூரியனுடைய பரிமாணத்தை நினைத்தாலே நமக்குப் பிரமிப்புத் தட்டுகிறது. அவனது குறுக்களவு 8,64,000 மைல்கள். அவனது கனமோ பூமியைப்போல 329,000 மடங்கு அதிகமானது. பல்லாயிரம் மைல்கள் நீளமுள்ள ஜ்வாலைகள் சூரியனிடமிருந்து சீறி எழுகின்றனவாம். இவ்வளவு பெருமையுள்ள சூரியனை நாம் அறிந்துள்ளோம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? கடலைப் படத்தில் மட்டும் பார்த்த ஒருவன் கடலின் ஆழத்தைத் தான் கண்டுவிட்டதாகக் கூறுவதையல்லவோ அது ஒக்கும்? சூரியனது நிஜ சொரூபத்தை நாம் ஒருநாளும் அறிய முடியாது. அதைப்பற்றி நாம் கற்பனை செய்யலாம், ஊகிக்கலாம்; ஆனால் அவனுடைய தன்மையை அனுபவ பூர்வமாகத்தெரிந்து கொள்வது நம்மாலாகும் காரியம் அல்ல.

சூரியனே சூரியனை அறிவான்; மற்றவர் உணர்வது அவனது தேஜஸின் ஒரு கலையை, அவனது ஜோதியின் ஓர் அம்சத்தை மட்டுமேதான்.

ஞான சூரியர்களாகத் திகழும் மகான்களுடைய விஷயமும் இத்தகையது தான். அவர்களுடைய சமகாலத்தவரிற் சிலரும் பிற்காலத்தவரில் பலரும் அவரது மகிமையை ஓரளவு அறிகின்றனர் என்பது உண்மைதான். ஏனெனில் மகாபுருஷர்களும் மானிட உருத் தாங்கி மக்களிடையேவாழ்ந்து நரர்போன்று நடந்து கொள்கின்றனர். அவர்களுடைய செய்கைகளின் மூலம் வெளிப்படுகின்ற உயர்ந்த குண மேம்பாடுகளைப் பலரும்கண்டு இன்புறுவது சுலபத்தில் சாத்யமாகின்றது. அவர்களுடைய ஜீவிய நூல்கள், உபதேச

மொழிகள் ஆகியவற்றைப் படித்தலும், அவர்களுடைய உயர்வு நன்கு புலனாகின்றது. அவர்களுடைய வாழ்க்கைப் பணிக்குக் கருவியாக அமைந்துள்ள ஸ்தாபனங்களின் மூலமும் அவர்களுடைய பெருமை தெரியவருகின்றது. ஆயினும் கூட, மகாபுருஷர்களுடைய தன்மையை உள்ளது உள்ளவாறு பரிபூரணமான அளவில் அறிந்துணருவது எல்லோருக்கும் சாத்யமான செய்கையல்ல.

ஏசுவின் கதையை அறியாதார் யார்? புத்தரின் சரிதையைக் கற்காதார் யார்? இராமரின் வரலாறு யாருக்குத்தான் தெரியாது? கண்ணனின் லீலைகளைக் கேளாதார் யார்? ஆயினும், மனித ஜாதி உஜ்ஜீவிக்கும்பொருட்டு தமது இதய ரத்தத்தைச் சிந்திய ஏசுவின் உள்ளத்தை, சுயநலமும் சிறுமைப் புத்தியும் நிறைந்த நமது அற்ப உள்ளம் அளந்துவிடுமா? பிறர் துயர் கண்டு மனம் பொறுது, செங்கோலை நீத்து பிக்ஷாபாத்திரத்தை ஏந்தி, பகுஜன ஸுகத்திற்கும் பகுஜனஹிதத்திற்குமே தமது வாழ்நாளை அர்ப்பித்த கருணாமூர்த்தியான புத்தருடைய பெருமையை, நிமிஷம் தோறும் பொருளையும் போகத்தையுமே நாடும் நமது மனம் அளந்து விடுமா? மாசு படிந்த நமதுஉள்ளம், தூய்மையே வடிவான சீதாபிராட்டியின் தன்மையை அறிந்துவிடுமா? கொசுக்கள் பதினாயிரம்சேர்ந்து மதித்தாலும் யானையின் பலத்தைப் பாவனை செய்வது சாத்யமாகுமா? குட்டைகள் கோடிசேர்ந்து ஆராய்ந்தாலும் சமுத்திரத்தின் விரிவைக் கற்பனை செய்யமுடியுமா? பெரியதைப் பெரியதுதான் அறியும். கவியை அறிவான் கவி. யோகியை அறிவான் யோகி.

விவேகானந்த சுவாமிகளை அறியாதவர் இன்று நம் நாட்டிலும் இல்லை, பிறநாடுகளிலும் இல்லை. அவ்வாறு அவரை அறியாதவருக்கு இந்து தேச சரித்திரமும் உலக சரித்திரத்தில் அடிப்படையான மாறுதல்களைச் செய்யும் நிகழ்ச்சியின் வரலாறும் தெரியாதென்றே கூறிவிடலாம். பள்ளி மாணவருக்குக் கூடத்தெரியும் அவரது ஜீவியத்தின் முக்கிய நிகழ்ச்சிகள். நவீன இந்தியாவை உருவாக்கிய ஆதிசக்திகளுள் விவேகாநந்தர்வாழ்வும் ஒன்றாகும்என்பதை இந்தியக் குடிமக்கள் நன்கு அறிவர். உலக சமரஸத்திற்கான அஸ்திவாரத்தை அவர் எவ்வாறு நிர்மாணித்தார் என்பதைப் பலவேறு நாடுகளில்உள்ள மேதாவிகள் பலர் உணர்ந்து அவரது வழியைப் பின்பற்றப் பெரிதும் முயன்று வருகின்றனர். விவேகானந்தருடைய ஜீவிய நூல் பலமொழிகளிலும் பிரசுரமாகியுள்ளது. அவரது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் கடிதங்களும் பலருக்கும் கிடைக்கும் முறையில் வெளிவந்துள்ளன. ஜீவகளை ததும்பும் அவருடைய படங்கள் பல இடங்களில் காணப் படுகின்றன. அவரதுபெயரால் சேவை ஸ்தாபனங்கள் பல, நம் நாட்டில் பணியாற்றி வருகின்றன. விவேகானந்தரை நாம் நன்கு அறிவோம் என்பதில் ஐயமே இல்லை. அவர் கிட்டத்தட்ட நம் காலத்தவரே. அவரை நேரில் கண்டவர் இன்று பலர் நம்மிடையே உள்ளனர். சுதந்திர பாரத ஒளியினில், அவரது திருக்கரம் ஏற்றிவைத்த தீபச்சுடரை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

ஆனாலும் விவேகானந்தரை அறிய வல்லவர் இன்னொரு விவேகானந்தரே யாவார். நாற்பது வருஷங்களே உயிர் வாழ்ந்து, நாற்பது கோடி மக்களைத் தட்டி எழுப்பி, நானிலவரம்பு எதையும் பாராட்டாது நாற்றிசையிலும் சத்திய உபதேசத்தைச் செய்த அந்த நரோத்தமனைச் சொற்கொண்டு வர்ணித்து விட முடியாது. சித்திர வாயிலாகத் தீட்டிவிட முடியாது, நூல் கொண்டு கட்டி யளந்து விட முடியாது. ஒவ்வொரு தசையிலும் சக்தி சொட்டிய அவரது உடலின் வீரியத்தை, தாய்நாட்டில் மட்டுமின்றித் தரணி முழுவதிலும் ஸ்தல யாத்திரை செய்த அந்த பரிவ்ராஜகரின் பிரபாவத்தை, செயற்கரியதைத் தாம் ஒருவராகவே அல்ல, தெய்வ சங்கற்பத்தின் தூதர் போன்று இருந்து, சாதித்த அந்த தீரரின் பராக்கிரமத்தை, விவேகமே நிறைந்த அவரது மகா மேதையை, புயலில் எழும் அலைகள் போன்று பொங்கிக் கிளம்பிய உணர்ச்சி வெள்ளங்களால் இடைவிடாது குமுறிய அவரது இதயத்தின் விசாலத்தை, அவர் துடிப்பை, தாகத்தை, ஆர்வத்தை, வேகத்தை, ஊக்கத்தை, ஓயாது உழைத்த அந்தக் கர்ம வீரரின் பரம சாந்த நிலையை — இதையெல்லாம் விளக்கிக் கூற வல்ல விற்பன்னர் எத்தனை பேர் இருக்க முடியும்?

எங்கிருந்தோ வந்த தோதாபுரி என்ற பிரம்மஞானியார் தக்ஷிணேசுவர ஆலயத்தை அடைந்து, தமக்கு அறிமுகமே ஆகாத இராமகிருஷ்ணரைக் கண்டதுமே அவரிடத்து அதியாச்சரியமான ஞானசித்தி திகழ்வதைக் கண்டு, வலிய வந்து, அவருக்கு வேதாந்த உபதேசம் செய்தார். அதே இராமகிருஷ்ணருடன் வெகு நாள் பழகிய பலர் அவரைப் பித்தர் என்று நினைத்திருந்தனர்!

இளைஞன் நரேந்திரன் நண்பர்கள் சிலருடன் இராமகிருஷ்ணரைக் காண அவரது

அறைக்கு வந்த முதல் தடவையிலேயே, கல்லூரி மாணவனுக விருந்த அச்சிறுவனே பிற்காலத்தில் வேதாந்த கங்கையைப் பார் எங்கும் சுமந்து சென்று மக்களது தாபத்தைத் தீர்க்கப் போகும் பரமாசாரியன் என்பதைக் கண்டுணர்ந்து இராமகிருஷ்ணர் அந்தப் பாலனைப் போற்றினர், சிலாகித்தார்; ஆராதிக்கவும் கூடச் செய்தார். இரத்தின வியாபாரிக்கன்றே விளங்கும் இரத்தினத்தின் பெருமை? மற்றவர் அதைச் சாதாரணக் கல் என்றுதானே ஒதுக்கித் தள்ளுவர்!

பொன் எது, பொன் அல்லாதது எது என்று சோதித்துக் கூறவல்ல பரமஹம்ஸ உரைகல் விவேகானந்தரை மதிக்க முடியா மாணிக்கமென்று கண்டு அவ்வுண்மையைப் பலருக்கும் எடுத்துக் காட்டிற்று.

1885-ம் ஆண்டில் பகரப்பட்ட பரமஹம்ஸ வாக்கு ஒன்றை இதற்கு எடுத்துக் காட்டாக இங்குக் கூறுவோம். அப்பொழுது நரேந்திரருக்கு வயது சுமார் இருபதுதான். தந்தையை இழந்து வறுமையால் துயருற்றுக் கொண்டிருந்த இளைஞர்தான் அவர். பிற்காலத்தில் அவருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துத் தந்த எந்தப் பெருமையையும் சமூகம் அவரிடத்தில் அப்பொழுது பிரமாதமாகக் கண்டு கொண்டுவிடவில்லை. உடல் திட்பமும் கூரிய மதியும் உள்ள ஓர் இளைஞனுகவே பலர் அவரைக் கண்டு மதித்தனர். ஆனால் இராமகிருஷ்ணருடைய கண்கள் கண்டதோ வேறு காட்சி!

"நரேந்திரன் வெகு உயர்ந்த பூமியைச் சேர்ந்தவன் ஆவான். அகண்ட பரம்பொருளினுடைய நிலையில் இருப்பவன் அவன். அவன் ஆண்மை மிகுந்தவன். இங்கு பக்தர்கள் பலர் வருகின்றனர். ஆனால் அவனைப் போன்ற இன்னொருவன் இல்லவே இல்லை.

அடிக்கடி நான் பக்தர்களை நிறுத்து மதிப்பிடுகிறேன். சிலர் பத்து இதழ்களுடைய தாமரை போன்றிருப்பதை உணர்கின்றேன். சிலர் பதினறு இதழ்த் தாமரைகள் ஆவர். சிலர் நூறு இதழ்த் தாமரைகள் போல் உள்ளனர். ஆனல் தாமரைகளுள் ஆயிரம் இதழ்த் தாமரை யாவான் நரேந்திரன்.

மற்ற பக்தர்கள் தோண்டியையும் குடத்தையும் போன்றவர்கள். ஆனல் நரேந்திரனே மிகப் பெரிய அண்டா ஆவான்.

மற்றவர் குட்டைகளும் குளங்களும் போன்றவர்கள். ஆனல் நரேந்திரனே ஹல்தார்புகூர் போன்ற பெரியதொரு நீர் நிலை.

மீன்களுள் பெரிய, செங்கண்ணுடைய மகரம் போன்றவன் நரேந்திரன். மற்றவர்களோ சிறு சிறு குட்டி மீன்களே யாவர்.

நரேந்திரன் ஒரு பிரம்மாண்டமான பாத்திரம் ஆவான். அவன் பல பொருள்களைத் தன்னுள்ளே கொள்ளக் கூடியவன். உள்ளே விசாலமான ஆகாசத்தை உடைய மூங்கில் போன்றவன் அவன்.

நரேந்திரன் எவ்விஷயத்தாலும் கட்டுப்படாதவன். ராகம் அல்லது இந்திரிய சுகத்திற்கு அவன் உட்படாதவன். மக்கள் கூட்டத்தினில் நான் இருக்கும்பொழுது நரேந்திரன் என்னுடன் இருப்பானுகில் எனக்குப் பெரும் பலம் தரும் உணர்ச்சி கிட்டுகின்றது."

இவ்வாறு கூறினர் பரமஹம்ஸர். மெய் வாக்கு ஒன்றையன்றி வேறு வாக்கைச் சொல்ல வல்லது அல்ல அவரது நா.

கங்கைக் கரையினில் உதித்தெழுந்த இந்த ஆயிரம் இதழ்த் தாமரையை நன்கு மலரச் செய்து உலக சேவைக்கென அதை அர்ப்பித்தார் இராமகிருஷ்ணர். ஆயிரம் இதழ்த் தாமரையை முற்றிலும் அறிந்துணரும் ஆற்றல் நமக்கு இல்லையானுலும், அதை நெருங்கி, அதை இப்புறமும் அப்புறமுமாகப் பார்த்து, ஒவ்வோர் இதழினின்றும் வெளியாகும் அதன் சோபையையும் மணத்தையும் ஆராய்ச்சி செய்தோமானல் ஓரளவு அதன் மகிமை நமக்குப் புலனுகும். அதையே செய்ய ஈண்டு முற்படுகின்றோம்.

விவேகானந்தப் பூரண ஜோதியின் கலைகள், அம்சங்களை ஒவ்வொன்ருக விரித்துரைப்போம். கடலினுள் மூழ்கி ஆழ்ந்து செல்லும் மாலுமிக்குப் புதிய புதிய விந்தைகள் புலப்படுவன போன்று, புதிய விளக்கங்களும் புதிய கருத்துக்களும் நமக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம். (தொடரும்)

—R. ராமகிருஷ்ணன்

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வகையானும் விழுப்பம் மிக்க இவ்வுரையினை ஆக்கியோரது மதி நலனையும் சிந்தனையின் உயர்வையும் வியந்து பாராட்டி மகிழ்வோம்; திருவாசகத்தின் எஞ்சிய பகுதிகட்கும் இத்தகைய விரிவுரையினைத் தமிழுலகம் பெறுமாறு, இறைவன் அவர்க்கு 'நன்மையும் செல்வமும் நாளும்' நல்கியருளுவானுக என்றே முடிக்கின்றோம்.

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

தூய உள்ளமும் எளிய கருத்தும்

அத்தியாயம் 4

உலக விஷயங்களில் இருந்து மனிதன் இரண்டு சிறகுகளால் உயர்த்தப் படுகிறான். அவ்விரு சிறகுகளாவன: தூய்மையும் எளிமையும்.

நம் கருத்துக்களில் எளிமை மிளிர வேண்டும்; நமது பற்றுதல்களில் தூய்மை திகழ வேண்டும். எளிமை இறைவன்பால் இட்டுச் செல்கிறது; தூய்மை இறை ஞானத்தை உணர்கிறது; இறையின்பத்தைத் துய்க்கிறது எனலாம்.

நற்செயல்கள் இறைவன்பால் நீ ஏகுவதைத் தடை செய்யா. ஆனால் உள்ளத்தில் நீ வரம்பற்ற ஆசையிலிருந்து விடுபட்டவனாக இருக்கவேண்டும்.

நீ உண்மையில், இறைவன் இன்னருட் போக்கினையும், உன்னைச் சுற்றி உள்ளவருக்கு நலத்தையும் மட்டும் கருதித்தேடுபவனாக இருந்துவிட்டால் கண்டிப்பாக உள்ளத்தில் நீ விடுபட்ட நிலையின் இன்பத்தை முழுமையாகத் துய்ப்பாய்.

உனது உள்ளம் உண்மையுடையதாகவும், நேர்மை நிரம்பியதாகவும் இருந்தால் உலகில் உள்ள ஒவ்வோர் உயிரும் உனக்குவாழ்வைக் காட்டும் கண்ணாடியாகும்; அன்றியும், இறைநிலையை இயம்பும் உயர்நூலாக (மறையாக) உனக்கு இருக்கும்.

இறைவன் பெருங்கருணையைக் காட்டாத எந்தச்சிறு அற்பப் பிராணியும் கூட உலகில் இல்லை.

2. உள்ளூரத் தூயோராகவும் நல்லோராகவும் இருந்தால், அனைத்தையும் நன்குகண்டு உண்மை நிலையைத் தடையற உணர்ந்து கொள்வீர்.

ஒரு தூய உள்ளம் நரகலோகத்தையும் சொர்க்கத்தையும் ஊடுருவிக் காண்கிறது.

ஒருவாது உள்ளத்தின் நிலைமை எப்படி உளதோ அதற்கு ஏற்றபடியே வெளி விஷயங்களைப் பற்றி அவர் தீர்மானிக்கிறார்.

உலகிலே இன்பம் இருக்கிறது என்றால், தூய உள்ளம் உடையவர் அதை அடைந்திருக்கிறார் என்பது நிச்சயம்.

எங்கேயாவது தொந்தரவும் மனத்துயரமும் இருக்கிறது என்றால் அதைத்தீய மனச்சாட்சியால் உறுத்தப்படுவோர் மிக நன்றாக அறிவார்.

எப்படி நெருப்பிலே போடப்பட்ட இரும்பு தன் மேலுள்ள துருவெல்லாம் இழந்து தீப்பிழம்பாகச்சிவந்து ஒளிர்கிறதோ, அப்படியே இறைவன்பால் முழு மனதுடன் திரும்பிய தூயோன் தனது சோம்பற் குணத்தை எல்லாம் விட்டுப்புதியதொரு மனிதனாகிறான்.

3. அற வழியிலே ஆர்வம் ஒருவருக்குக் குறையத் தொடங்கினால், சிறிது சிரமமோ முயற்சியோ எடுப்பதற்கும் அவர் அஞ்சுகிறார். வெளி உலகிலிருந்து வசதியை விருப்பத்துடன் பெற்றுக் கொள்கிறார்.

ஆனால் சரிவரத் தன்னைத்தானே முழுமையும் அடக்குதற்குரிய முயற்சியைத் தொடங்கி இறையை நாடும் வழியில் ஆண்மையுடன் செல்லத் தொடங்கி விட்டால், முன்னர் பெருந்தொல்லையாகத் தோன்றியவற்றையும் எளிதாக மதிப்பிடுவார்.

அத்தியாயம் 5

தன்னைத் தானே கண்காணித்தல்

நம்மையே நாம் பெரிதும் நம்பியிருக்க முடியாது. ஏனெனில் அடிக்கடி நாம் இறையருள் இல்லாதவர்களாக இருக்கிறோம். தெளிவாக உண்மையை அறியாதவர்களாகவும் இருக்கிறோம்.

நம்மிடம் இருக்கும் அறிவொளி மிகச் சிறிதே. அச்சிறு ஒளியையும் நமது அசட்டையான வாழ்க்கையால் மிக விரைவில் இழந்து விடுகிறோம்.

நமது உள்ளத்தில் உள்ள அறியாமை இருளையும் அதுஎவ்வளவு பேரிருள் என்பதையும் நாம் அறியாதவர்களாக அடிக்கடி இருக்கிறோம்.

அடிக்கடி தீயகாரியங்களைச் செய்து விடுகிறோம். நமக்கு நாமே அதற்கு மன்னிப்பும் கொடுத்துக் கொள்ளும் மோசமான செயலையும் செய்கிறோம்.

சில சமயங்களில் வெறி நம்மைப்பிடித்து உந்துகிறது; அதனை ஊக்கமெனக் கருதிக் கொள்கிறோம்.

மற்றவர்களிடம் உள்ள சிறு சிறு குற்றங்களைப் பெரிதும் கண்டிக்கிறோம். நம்மிடம் உள்ள பெரும் குற்றங்குறைகளைக் கவனியாமல் அசட்டையாக விட்டுவிடுகிறோம்.

மற்றவர்களால் நாம் அடையும் துன்பங்களையும் தொந்தரவுகளையும் விரைவாக உணர்ந்து நிறுத்தும் விடுகிறோம். ஆனால்

மற்றவர்கள் நம்மால் அடையும் பல்வேறு தொந்தரவுகளைப் பற்றி மனத்தில் நினைப்பதும் இல்லை.

தனது வேலைகளையே கூர்ந்து சரியாகக் கவனிப்பவன், மற்றவர்களைப் பற்றிக் கண்டிப்பாக எண்ணி மதிப்பிடுவதற்குக் காரணமே காணமாட்டான்.

2. அகவாழ்வு நடத்தும் அன்பன் மற்ற கவலைகள் அனைத்தையும்விடத் தன் தூய்மையைப் பாதுகாத்துக்கொள்ளும் கவலையையே பெரிதாக மதிக்கிறான். அப்படித்தன்னையே கண்டிப்பாகக் கண்காணித்துக் கொள்பவன் மற்றவர்களைப்பற்றிப் பேசாது எளிதில் அமைதியுடன் இருக்கமுடியும்.

உன்னையே தனிக் கவனத்துடன் கண்காணித்து, மற்ற மனிதர்களுடைய குறைபாடுகளைப் பாராட்டாது அமைதியுடன் இருந்தால் அன்றி நீ ஒருக்காலும் உண்மையாக அகத்தில் அறவழி நிற்போனாக ஆக இயலாது.

உனது தூய்மையைப் பற்றியும் இறைவனைப்பற்றியுமே முழு கவனத்துடன் இருந்தாயானால் வெளியுலகில் நீ எதைக் கண்ணுற்றபோதிலும் அதனால் சிறிதும் பாதிக்கப்படவோ தாக்கப்படவோ மாட்டாய்.

உன்னையே நீ கவனித்துக் கொள்ளாத போது நீ வேறு எங்கே இருக்கிறாய்? அப்படி உன்னையே அசட்டை செய்துவிட்டு உலகெலாம் ஓடித்திரிந்து வருவதில் என்ன லாபத்தைக் காண்கிறாய்?

உண்மையான மன அமைதி பெற்று, மெய்யாகவே நோக்க ஒருமையோடிருக்க விரும்பினையானால், நீ எப்போதும் மற்ற விஷயங்களையெல்லாம் பின்னே தூரத் தள்ளிவிட்டு, உன்னைப்பற்றியே கவனமாக இரு.

3. உலகக் கவலைகள் அனைத்தினின்றும் நீங்கினவனாயிருக்கும் நிலையில் உன்னை வைத்துக்கொண்டால்தான் நீ விரைந்த ஆன்மீக முன்னேற்றத்தை எய்துவாய்.

உலக விஷயங்களில் எதையாவது பெரிதாக மதித்து விட்டாயானால் மிகப் பின்நோக்கி விழுந்து விடுவாய். நீ உலகில் எதையுமே பெரிதாகக் கருதாதே. எதையுமே உயரியதாகக் கொள்ளாதே. இன்புறுத்தக்கூடியதாகவோ எதையுமே எண்ணாதே. இறைவனையோ இறையைப் பற்றியவைகளையோ அப்படிக்கொள்.

எப் பிராணியிடத்திலிருந்தேனும் பெறும், வாழ்க்கைச் சுக வசதிகள் அனைத்தையும் வீண் என மதி.

ஆண்டவன் மீது அன்புகொள்ளும் ஓர் ஆன்மா இறைவனுக்குக் கீழானவை அனைத்தையும் துச்சமாகத் தள்ளிவிடுகிறது.

இறைவனே என்றும் இருப்பவன், அளவு கடந்த பெருமையுடையவன், அனைத்துயிரிலும் நிரம்பியிருப்பவன். ஆன்மாவின் ஆறுதலானவன், உள்ளத்தின் உண்மையான இன்பமளிப்பவன்.

புத்தமதம் மறைந்ததேன்?

R. பத்மநாபன், பி. ஏ., பி. டி.

சமீப காலத்தில் நம்மிற்சிலர் "முற்போக்கானவர்கள்" என்று தங்களைக் கூறிக்கொண்டு இந்திய சரித்திரத்தின் சிறந்த உண்மைகளைத் தங்கள் சொந்தக் கொள்கைகளைப் பரப்புவதற்காக மறைத்தோ அல்லது ஒரு விதமாக மாற்றியோ அல்லது சேதப்படுத்தியோ வருகிறார்கள். இது மிகவும் வெறுக்கத்தக்க செயலாகும். பொதுவாக நம் நாட்டில் ஆரியர்கள் வருகை முதல் முகம்மது கோரி டில்லியில் அடிமை வமிசத்தை நிறுவியது வரையில் ஏற்பட்ட பல சம்பவங்களைப் பல பேர்கள் பலவிதயாகக் கருதியதால், அதன் பயனாகப் பலவித இன்னல்கள் நேருகின்றன. அம்மாதிரியான பரிதவிக்கும் முறையில் இந்திய சரித்திரத்திலிருக்கும் ஒரு முக்கிய சம்பவம்: புத்தர் இந்தியாவில் தோன்றி, ஒரு மதத்தைச் சிறப்பாக நிறுவி, சுமார் 1500 ஆண்டுகள் செழுமையாக வளர்ந்து, பிறகு காலப் போக்கினால் தாழ் நிலையெய்தி மறைந்ததாகும்.

சிறந்த சரித்திர ஆதாரங்களைக் கொண்டும், பல ஆசிரியப் பேராசிரியர்களின் கருத்துக்களைக் கவனத்தில் வைத்துக் கொண்டும் புத்த மதம் தோன்றி மறைந்ததற்கு மூல காரணங்களையும், அவைகளுக்கு உதவியாயிருந்த சமய சந்தர்ப்பங்களையும் தெள்ளிதாக ஆராய்ந்தறிவதே நமது நோக்கமாயிருத்தல்

வேண்டும். புத்தமதம் அதன் ஜன்ம பூமியில் மறைந்துபோனதற்குக் காரணங்கள் எவை?

இதை நாம் நன்கு ஆராய்வதற்கு முன் புத்தமதம் எப்படி அவ்வளவு விரைவில் பரவிப் புகழ்பெற்ற அசோகனைப் போன்ற பேரரசர்களால் போற்றி ஆதரவளிக்கப் பெற்று, மக்களாலும் மனப்பூர்வமாக விரும்பப்பட்டதென்பதை முதன் முதலில் உணர்தல் வேண்டும். புத்தர் தம்முடைய மதத்தை நிறுவிய பொழுது, அது பொது மக்களால் இந்துமதத்தின் ஒரு பிரிவாகவே கருதப்பட்டது. நாம் அதை நன்கு ஆய்ந்து நோக்கின், இந்து மதம் கிருஸ்தவமதங்களிற் போலன்றி புத்தமதத்தில் மேலான கடவுளை வழிபடும் மார்க்கம் வெளிப்படையாகவோ அல்லது மறைவாகவோ காணப்படுவதில்லை. இதையே சரித்திர நிபுணரான வி. ஏ. ஸ்மித் என்பார் வேறுவிதமாகக் கூறுகிறார், 'புத்தமதம் முறைப்படி ஒரு மதமாகாது''. ஆனால் மெய்யறிவு பெற்றது முதல் வெகு எளிதில் புரிந்து கொள்ளும்படி புத்தர் அன்றாட வாழ்க்கையில் பயன்படக் கூடிய அறநெறிகளைத் தாய் மொழியான பாலி மொழியிலே போதித்து வந்தார். எளியபோதனைகளை வெகு சுலபமாகவும் வெற்றிகரமாகவும் பரப்பிப் பலநூற்றாண்டுகளில் புத்தமதம் பிரசித்தி பெற்றிருந்ததற்கு மூன்று முக்கியகாரணங்கள் உள. முதலாக மிகப்பெரிய பேரரசை ஆண்ட அரசர்களான அசோகனும், கனிஷ்கனும் ஹர்ஷவர்த்தனும், மற்ற குறுநில மன்னர்களும் புத்த மதத்திற்குப் பொருளாலும், ஆட்களாலும் தூதர்களாலும், ஆர்வத்தினாலும் ஈந்த பேருதவியேயாகும். இரண்டாவதாக, புத்தரின் முதற் சீடர்கள் மிகச்சிறந்த அறிவாளிகளாகவும் சுயநலமின்றித் தொண்டாற்றுதலையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு சலியாத உழைப்பினாலும் சமூக சேவையினாலும் சிறந்து விளங்கினார்கள். மூன்றாவதாக, சாதாரண நடையில் அரசர்கள்முதல் பொது மக்கள் வரையில் எல்லோராலும் எளிய நடையும் வாழ்க்கையும் கையாளப்பட்டன. மக்களிற் சில பகுதியினரே வடமொழியில் பயிற்சி பெற்றும் போதிக்கப் பட்டும் வந்தனர். புத்த பிக்ஷுக்களும், பிக்ஷுணிக்களும் ''கடவுள்'' என்ற பெயரைக் குறிக்காமல் கருணைக்கும் அன்பிற்கும் பாத்திரமான புத்த தருமத்தையும், சங்கத்தின் மேம்பாட்டையும், புத்தரின் விசேஷ குணங்களையும் அவ்வப்பொழுது மக்களின் மனங்களில் பசுமரத்தாணி போல் பதியவைத்தனர். இம்முறைகளால் புத்தமதம் வெகு விரைவில் காட்டுத்தீ போல் கங்கைச் சமவெளியில் சுமார் 500 ஆண்டுகளுக்குமுன் பரவலாயிற்று.

இனி நாம் புத்தமதம் மறைந்த விதத்தைக் கவனிக்கலாம். புத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் எப்பொழுதும் எவ்வகையிலும் விரோத மனப்பான்மையோ எதிர்ப்போ இருந்ததாகத் தெரியவில்லை. மிகச்சிறந்த அரசர்களான அசோகனும் ஹர்ஷனும் இந்து மதத்தை ஓரளவு எதிர்த்தோ அல்லது துன்புறுத்தியோ புத்த மதத்தைப் பரவச் செய்தனர் என்பதை எந்தச் சரித்திரக்காரனும் கூறவில்லை. ஆனால் இதற்கு மாறாக இந்து மதத்தையும் அவ்வப்பொழுது ஆதரித்து அதற்கும் புரவலர்களாக இருந்தனர் என்க. ஆகையால் இந்துமதம் புத்தமதத்தைச் சிதைத்துக் கடைசியாகக் கொன்றது என்ற கூற்றுக்கும் குற்றத்திற்கும் சரித்திர பூர்வமாக எவ்வித சான்றுகளுமில்லை என்றே கூறப்படவேண்டும். ஆகையால் மற்ற மதங்களைப் போல் புத்த மதமும் அதன் போக்கில் இயற்கையாகவே காணப்பட்ட சூழல்களினாலும் வெறுக்கத் தக்க பழக்க வழக்கங்களினாலும் குறைபாடுகளினாலும் சிதைந்து போனதென்பது புலனாகும்.

உதாரணமாக, புத்தர் தம்முடைய தருமத்தில் கடவுளைப்பற்றி எவ்விதமான முடிவான எண்ணத்தையும் முக்தி மார்க்கத்தையும் எடுத்துக் காட்டவில்லை. விரும்பியோ விரும்பாமலோ கடவுள் என்ற பொருளைப்பற்றி மௌனமாக இருந்தனர் என்பது கண்கூடாகத் தெரிகிறது. இந்தியாவின் வடமேற்குக் கரை வழியாகவந்த அயல் நாட்டார்—சாகர்கள், யூச்சர்கள், துருக்கியர், ஹூணர்கள், யவனர்கள்—புத்த மதத்தின் கொள்கைகளையும் தத்துவங்களையும் — குறிப்பாக, புலால் உண்ணாமை, அறநெறி மார்க்கம் முதலியவைகளை—விரைவில் வெறுத்தனர். அவைகளை எளிதில் ஏற்றுக்கொள்ள அவர்களுக்குப் போதிய ஆற்றலும் பொறுமையும் தன்மையும் காணக்கிடைக்கவில்லை. மேலும் அவர்களில் அநேகர் கடவுள் வழிபாட்டை விக்ரகங்கள் மூலமாகவும் கோயில்களின் வழியாகவும் ஆடம்பரமாக நடத்தப் பிரியப்பட்டனர். இக்காரணங்களினால் அவர்கள் இந்தியாவிலேயே தங்கிப் பொதுமக்களுடன் ஒன்று கலந்தபொழுது இந்துக்களாகவே இருக்கப் பேரவாக்கொண்டனர். இதையே ஆசிரியர் வி. எ. ஸ்மித் பின்வருமாறு கூறுகிறார்: ''பௌத்தமத போதகர்கள் அன்னியர்களுடைய மனங்களைக் கவரவில்லை; இந்து மத வாழ்க்கை விதிகளை அவர்கள் எளிதாக

ஒப்புக்கொண்டனர்.'' இதேகாரணங்களினல் புத்தமதத்தில் அநேக மாறுதல்கள் கி. பி. இரண்டாவது நூற்ருண்டில் தோன்றலாயின. கடவுள் வழிபாட்டில் இருவகை முறைகள் தோன்றின. ஹீனயானமென்றும் மகாயான மென்றும் ஏற்பட்ட வழிபாட்டில் முதல் வழியில் புத்தர் முதன் முதலில் போதித்த அறநெறி மார்க்கமே எவ்விதமான மாறுதலின்றியும் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனுல் மகாயானப்பிரிவில் புத்தரால் உணர்த்தப்படாத தோத்திர முறையும் புத்தரைக் கடவுளாகவும் ரஷிக்கும் கர்த்தாராகவுங்கொண்ட முறைகளும் அடிப்படையாக இருந்தன. இரண்டாவது முறை நாளடைவில் இந்து மதத்தினரால் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதில் சிறந்து விளங்கிய மெய்யன்பர்கள் ஹர்ஷரும் நாகார்ஜுனனுமேயாவர். இந்து மதத்திற்கும் மகாயானத்திற்கும் நாளடைவில் எவ்வித பேதங்களுமின்றிப் போகவே, இந்துக்கள் கட்டிய மாபெருங்கோயில்களிலும் புத்தருக்கு ஓரிடம் அளிக்கப்படலாயிற்று. வங்காளத்தில் ஆண்ட பல வம்சத்து மன்னர்கள் (8வது நூற்ருண்டு முதல் 12வது நூற்ருண்டுமுடிய) இந்த மகாயான மார்க்கத்தையே தழுவினர்.

நிற்க, புத்த மதத்தின் மூன்று முக்கிய கொள்கைளில் ஒன்ருய சங்கமும் தாழ்நிலை எய்தியது. பிக்ஷுக்கள் ஏராளமாகப் பொருளும் சொத்தும் தேடிக் கொண்டார்கள். பிக்ஷைஎடுத்துஉண்டும் உண்பித்தும் வாழ்ந்த வழக்கங்கள் மறைந்தன. மேலும் அரசர்கள் காட்டிய பேராதரவினல் கொள்கைகளும் மாறுபடலாயின. பிக்ஷுக்கள் தனவந்தர்களாவும் மடாதிபதிகளாவும் திகழ்ந்தனர். சங்கத்தில் நேர்மை இன்றிப் போனதோடு மக்களின் பேராதரவும் குன்றியது. அசோகனைப் போல அரசர்கள் மேலும் மேலும் ஆதரிக்க அக்காலத்தில் தோன்றவில்லை. ராஜபுத்திரர்களும் க்ஷத்திரிய தருமத்தைக் கடைப்பிடித்து இந்து மதத்தையே போற்றி வந்தனர். 12-ம் நூற்ருண்டில் அம்மதம் பிறந்த இடத்திலேயே தாழ்வுற்றிருந்தது என்று சொல்வது மிகையாகாது. அது மறைந்ததற்கு இறுதிக் காரணம்: முகமதியர்களில் கஜினி, கோரி என்பவர்களின் படையெடுப்புகள் இந்துஸ்தானத்தின் மீது ஏற்பட்டு அரசியல் குழப்பத்தைஉண்டாக்கி உள்நாட்டில் போரையும் பிரிவினையையும் விளைவித்ததேயாகும். இத்தகைய காரணங்களினுலும் சமய சந்தர்ப்பங்களினுலும் உலகத்தில் தோன்றிய புனிதமான மதங்களில் ஒன்ருன புத்தமதம் பலநூற்ருண்டுகட்குள் தாழ்வுற்று இந்தியாவிலிருந்து மறையலாயிற்று.

பாவிக்கும் கதியுண்டு

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

(1)

'நான் செய்த குற்றங்களும், தவறுகளும் எண்ணிக்கையில் அடங்கா'—அவனுடைய ஒலி குறைந்துகொண்டே போயிற்று. முகம் சிவந்து போயிற்று. அடிக்கடித் தரையில் தலையை முட்டிக் கொண்டான். செய்த தீங்குகளை எண்ணி வருந்துவதாகிய பச்சாத்தாபத் தீயின் சுடர் அவன் உள்ளத்தின் பாபத்தைச் சாம்பலாக்கத் தொடங்கிற்று. அதன் வெப்பம் உடலின் வெளிப்புறத்தையும் சூடாக்கிற்று.

'என் பெயரைக் கூறினல் நரகங்கூட நடுங்கிக் கதவைத் தாளிடும். நான் எம்பிரானின் திவ்ய மூர்த்தியின் ரத்தினபாரணத்தைத் திருட வல்லவா வந்தேன்' என்ருன் அவன்.

சீடர்கள் அருவருப்பினல் முகங்களைத் திருப்பிக் கொண்டனர். 'எம்பிரானின் திருவணியைக் களவாட வந்தவன், தீய கள்ளன் எவ்விதமான தண்டனையினலோ, செயலை ஒப்புக்கொண்டு வருந்தி மன்னிப்பைப் பெற வேண்டுவதனலோ, தூய்மை பெற மாட்டான்' என்பது அவர்களுடைய உறுதியான கொள்கை.

ஆயினும் ஆசிரியர் தன் அருங்கரத்தை, அண்டியவர்கட்கு அச்சமின்மையைக் கூசாது அளிக்கும் திருக்கரத்தை, அந்த இரும்பு மனிதன் தலையில் வைத்துவிட்டார். குழந்தையைப்போல் ஆசிரியரின் திருவடிகளில் தலையை வைத்து விக்கிவிக்கி அழத் தொடங்கினன், அந்த விந்தைக் கள்ளன்.

'குழந்தாய்! நீ வீணாக வருந்துகின்றனே. எம்பிரான் உன்னுடையவும் என்னுடையவும் எல்லோருடையவும் உயர் தந்தை. உன் தந்தையின் செல்வத்தை எடுத்துக்கொள்ள நீ விரும்பினால் அஃது எவ்வாறு குற்றமாகும்? உன் தந்தை கருணைவள்ளல். அவரிடம் இன்னமும் எண்ணற்ற விலைமதிக்க முடியாத ரத்தினங்கள் உள. எம்பிரானாகிய அத் தந்தையினருகிற் சென்று எல்லாவற்றிற்கும் உரியவனாவதை விட்டு, இவ்வற்பமான சில பொருள்களைப் பெற்று ஏன் மகிழ்ச்சி பெற விரும்புகின்றனே?'

என்று அமைதியும் அருளும் நிறைந்த குரலில் ஆசிரியர் கூறினார்.

'பெரியோரே! என்னால் இனியும் பொறுக்க முடியாது. நீர் எனக்குக் கொடிய சாபத்தைக் கொடுத்துவிடும். இவ்வருளின் சுமையை இத்தீயோன் தாங்கமாட்டான்' என்று கூறிக்கொண்டே தன் திரண்ட இரு கரங்களால் ஆசிரியரின் திருவடிகளை இறுகப் பிடித்துக்கொண்டான் அக்கள்வன்.

'இவ்விழிந்தோனது பெயரான வேங்கடன் என்ற சொல்லைத் தாம் கேட்டிருக்கக் கூடும். இந்தப் பிசாசுதான், களவு, துன்புறுத்தல், தீய செயல், இவற்றையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவன். ஓர் விலை மாதை மகிழ்விக்க வெண்ணியே இன்று எம்பிரானின் ஆபரணத்தைக் களவாட வந்தவன். எவனாவது தடை செய்ய முயன்றிருந்தால்?'

என்று சொல்லிக்கொண்டிருந்த வேங்கடனின் பார்வை தொலைவில் தரையிற் கிடந்த கத்தியின் மீது விழுந்தது. அவன் முதலிலேயே கத்தியைக் கீழே எறிந்திருந்தான்.

'ஆ! ஆ!! துணிவுக்கள்வன் வேங்கடனா?' என்று சீடர் திடுக்கிட்டனர். அச்சம், கவலை, வியப்பு, இவற்றை அவர்களின் விரிந்த விழிகள் அறிவித்தன.

எவனைப்பற்றிய கவலை அரசாங்கத்தின் அதிகாரிகளைத் தூக்கமில்லாமற் செய்ததோ, அந்த வேங்கடன்; நன்முறுக்கேற்றிய கனமான கயிற்றிற் கொப்பான உறுதியான உடலையும், கருநிறத்தையும், சிவந்த விழிகளையும் கனமும் அடர்த்தியும் பெற்ற கூந்தலையும் கொண்ட வேங்கடன்; பார்க்கும் போதே நடுக்கத்தை யளிக்கும் வேங்கடன்; ஜகத்குரு ஸ்ரீ ராமானுஜாசாரியரின் பகைவர்களின் சூழ்ச்சிக்காளான வேசியின் தூண்டுதலினால் நகையைக் களவாட வந்தான்.

ஆசாரியர் தடைசெய்வது உறுதி. வேங்கடனின் கத்தியும் தன் அலுவலையாற்றி முடிக்கும் என்பது பகைவர்களின் நம்பிக்கை.

'உலகிற்கு நலம் உண்டாகுக. ஏனைய ஜீவராசிகளும் இன்பமுறட்டும்' என்ற விடை வந்தது.

திருவடிகளைப் பிடித்தவண்ணம் வேங்கடன் ஒளியை வீசும் உருவத்தையும், அன்பையும் தயவையும் பொழியும் குரலையும் பெற்று, உலகின் நலனையே எப்பொழுதும் எண்ணியுள்ள ஆசாரியரின் உருவத்தை நோக்கினான். துணிவுள்ள வேங்கடன் தன் நரம்புகளில் உதிரம் தோய்ந்து விட்டதாக உணர்ந்தான். அவனது உடல் பரவசமாகிச் செயலாற்றும் திறமையை இழந்தது. மறுபடியும் எழுந்தான், கத்தியை வீசி எறிந்தான். கால்களைப் பிடித்தான்.

"நான் உன் பெயரைக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீ இப்படிப் பேடியைப்போல் அஞ்சுவாய் என்று நினைத்ததில்லை. ஸ்ரீ ரங்கநாதரின் அன்புக் கடலுக்கு எல்லையோ முடிவோ கிடையாது. அவருக்கெதிரில் ஏனையோரும் குழந்தைகளைப் போன்றவர்களே யாவர். அவருடைய பார்வைக்குக் குற்றமென்பதே தென்படுவதில்லை. உன்னை அவர் திருவடிகளில் ஒப்புவித்துவிடு. அவர் உறுதியாக ஏற்றுக் கொள்வார்" என்றார் ஆசாரியார்.

இப்பொழுது வேங்கடன் துணிவுள்ளவனாக விருக்கவில்லை. ஆசாரியரின் அருள் அவனைத் தூயோனாக்கிவிட்டது. கவலையுள்ளவனிடம் செல்வம் தங்குமா? செல்வம் மறைந்த பிறகு தோழர் கூட இருப்பாரா? வேங்கடன் கோதாவரியாற்றின் கரையில் ஓர் சிறிய குடிலை அமைத்துக்கொண்டான். ஆசாரியரிடம் பெற்ற ஒரு 'விக்கிரஹ'த்தை அதில் நிலைபெறச் செய்து பூஜை செய்துவந்தான். இல்லத்தில் முதுமை நிலையைப் பெற்ற தாய்தான் இருந்தாள். 'தன் ஒரே மைந்தன் என்றோ ஒருநாள் கொடிய செயலிற்காக அரசாங்கத்தினரால் கழுவிலேற்றப்படுவான்' என்று எப்பொழுதும் அஞ்சிக்கொண்டிருந்த அவ்வன்னை தன் மைந்தனுடைய மாறுதலினால் மிகவும் மகிழ்ந்து கூடவே இருந்துவந்தாள்.

(2)

எம்பிரானுக்கு உணவளிக்க வேண்டாமா? அதற்காக வேங்கடன் சிறிய நிலப் பகுதியை உழுது செப்பனிட்டான். அதிகமான உழைப்புடன் அதில் உணவிற்கு வேண்டிய

தானியத்தைப் பயிர் செய்துவந்தான். குடிசைக்கருகிலேயே சில பழந்தரும் மரங்களையும் பயிர் செய்தான். பூஜைக்கு வேண்டிய மலர்ச் செடிகளையும், மரங்களையும் துளஸிச் செடிகளையும் தோன்றச் செய்து அவன் அந்த இடத்தை ஓர் அழகிய ஆசிரமமாக்கினான்.

இன்று ஏகாதசி; இன்று கிருஷ்ணன் பிறந்த அஷ்டமி; என்று எல்லா திருநாட்களையும் வேங்கடன் கொண்டாடினான். அன்னைக்கும் மைந்தனுக்கும், மலரைக்கொய்வதற்கும், நீரைப்பாய்ச்சுவதற்கும், எம்பிரானுக்களிக்கும் 'பிரசாத'த்தை ஆக்குவதற்குமே நேரம்போதாதிருந்தது. எப்பணியையாற்றும் போதும் திருமாலின் நாமங்களை அவர்கள் நாவுகள் கூறிய வண்ணம் இருந்தன. அவர்களுடைய ஏனைய செயல்களும் எம்பிரான் பணியை ஒட்டியே இருந்தன.

வேங்கடன் குடிலுக்குச் சாதுக்கள் வந்த வண்ணம் இருந்தனர். பெரியோர் கூட வேங்கடன் அளித்த பிரஸாதத்தைப் பெற விரும்பினர். ஏனையோருக்கும் அக்குடில் நல்வரவையளித்தது; கதைகள், நாமங்களைக் கூறுதல், பெருமாளின் புகழைச்சொல்லுதல், இவற்றால் இழுக்கப்பட்டு அண்டைக் கிராமக்காரர்கள் வரத்தொடங்கினர். ஒரு நாள் எவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மக்கள் கதவுகளை மூடிக்கொள்வரோ, அதே வேங்கடனை நல்வரவு கூறி வரவேற்கத் தொடங்கினர். ஆனால் வேங்கடனுக்குப் பூஜை முதலியவற்றிலிருந்து ஓய்வு ஏது? அவன் எங்கும் செல்லவில்லை.

'குழந்தாய்! மழை நீர் முழுதும் வயலினின்றும் வெளியே போய்விடும். சரியாக அணைகட்டப் போகவேண்டாமா?' என்று கிழவியான அன்னை வெகுநேரம் காத்திருந்தும் வராத மைந்தனை அழைத்துக் கூறினாள்.

'எம்பிரானைப் படுக்கையில் உறங்கச் செய்துவிட்டு வருகிறேன்' என்றான் வேங்கடன்.

வேங்கடன் கர்ப்பூர ஆரதி எடுக்க எழுந்தான். கையில் இருந்த விளக்கு நெய்தீர்ந்தமையால் அணைந்து போயிற்று. அது எப்பொழுது அணைந்தது என்பதை வேங்கடன் அறியான். வெளியில் அதிகமான மழை பெய்து கொண்டிருந்தது. மழை பெய்யும் ஒலியில் எங்கும் நிறைந்த பரம்பொருளின் பெயரின் ஓசையை உணர்ந்த வேங்கடன் அதிலேயே மூழ்கிப்போனான். மழை ஓய்ந்து போயிற்று, இரவு முக்கால்பாகமும் கழிந்தது. இன்னமும் கர்ப்பூர ஆரதி முடியவில்லை. துதி, படுக்கை வேறு ஆகவேண்டும்.

எப்பொழுது வேங்கடன் எழுந்து வயலுக்குச் சென்றானோ? தெரியாது.

'என்ன ஆயிற்று? வேங்கடனைக் காணோமே? எப்பொழுது வருவானோ வெகு நேரம் ஆயிற்றே? இன்னமும் வரவில்லையே' என்று சொல்லிக்கொண்டே கிழவி விளக்கை ஏற்றினாள். கிளம்பினாள். தரை எல்லாம் சேறும் சகதியுமாக இருந்தது; அவள் தவளைகளின் ஓசையைக் கேட்டுப்பழகி இருந்தாள். ஆனால் மின்னலும் இடியோசையும் மாத்திரம் அவள் மனதைக் கலங்கச் செய்தன. அருவிகளில் நீர்பெருகும் சத்தம் நன்கு செவிகளிற் பதிந்தது.

'குழந்தாய்? எங்கே இருக்கின்றனை?' என்று அன்பொழுக மைந்தனை அழைத்த நாதம் எதிர் ஒலித்தது. பதிலைக் காணோம்.

வேங்கடன் இப்போதெல்லாம் முன்போல் இல்லை. பித்துக் கொண்டவனைப் போல் இருக்கிறான். எதையோ பார்ப்பவனைப் போல் விழிகளை எங்கோ செலுத்திய வண்ணம் நின்று விடுகிறான். அது தான் அவள் கவலையை அதிகமாக்கிற்று.

'அம்மா! நீ ஏன் இங்கு வந்தனை?' என்று சொல்லிக் கொண்டே வேங்கடன் எழுந்தான். தோள்களில் கையை வைத்துத் தாய் அசைத்த பிறகுதான் அவன் சுயவுணர்வைப் பெற்றான். திடுக்கிட்டு நோக்கினான்.

வயலின் நீரெல்லாம் வெளியே சென்று கொண்டிருந்தது. அவன் கொஞ்சம் மண்ணைப்போட்டு ஓட்டத்தைத் தடுக்க ஆரம்பித்துண்டு. ஆனால் அவன் அந்த நீரோட்டத்தில் கையை வைத்த வண்ணம் உட்கார்ந்து விட்டான். எவ்வளவு நேரமாக அந்த நிலையில் இருந்தானோ? எவர் அறிவார்?

'நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கின்றனை' என்று அன்புடன் அன்னை வினவினாள்.

'புறப்படு. வீடு செல்லலாம்' என்று சொல்லியவண்ணம் கைகளினால் மண்ணை எடுத்துப் போட்டான். கால்களினால் மிதித்தான். கை, கால்களைக் கழுவினான். அன்னையுடன் வீடு திரும்பினான்.

இங்ஙனம் இருந்தால் சாகுபடி எப்படி நடைபெறும்? காலையில் பூஜைக்கு உட்கார்ந்தவன் நடுப்பகல் வரை உட்கார்ந்த வண்ணம் இருந்தான். மறுபடியும் மாலையில் நீராடிப் பூஜை செய்ய எழுந்தான்.

வேறு வழியின்றி எருதுகளை வேறொருவருக்குக் கொடுத்து விட்டான். பிறகு எந்த

அந்தணனுவது வலுவில் தின்பண்டத்தைக் கொடுத்தால் அதை ஏற்றுக்கொண்டான். வயிற்றுப் பாட்டிற்காகக் பூஜைக்குத்தடை ஏற்படக்கூடாது என்பது அவனது உறுதியாயிற்று. உழவுத் தொழிலை விட்ட பிறகு அவனுக்குப் போதிய நேரம் பூஜை செய்யக் கிடைத்தது. அன்னைக்கு எப்படியாவது மைந்தன் இல்லத்திலேயே இருந்தது மகிழ்வை அளித்தது.

'வேங்கடா! இன்னமும் எம்பிரானுக்கு நீராட்டவில்லையே' என்று பரபரப்புடன் அன்னை ஓடிவந்தாள். அப்பொழுது வேங்கடன் அழகிய மலர் மாலை ஒன்றைக்கையில் எடுத்துத் திருமாலின் திருமுடியிற் சூட்டுவதற்கு நின்று கொண்டிருந்தான்.

'பழைய மலர்களை இன்னமும் நீக்கியபாடு இல்லை. நீராட்டியுமாக வில்லை. எப்படி மலர்மாலையை எம்பிரானுக்குச் சாத்தலாம்? பூஜை முறைகூட இவனுக்கு மறைந்து போயிற்றே. தன் உணவையோ, ஆடையையோ கூட ஒழுங்கான நேரத்திலும் முறையிலும் ஏற்க முடியவில்லையே? இது ஏதோ ஒரு நோயாகத்தான் இருக்க வேண்டும்' என்று வேங்கடனுடைய அன்னை வருந்தலானுள்.

'அம்மா! நீயே இனிப்பூஜையைச் செய்து விடவேண்டும்' என்று நாணத்தால் குனிந்த முகத்துடன் வேங்கடன் அன்னையிடம் கூறினுன்.

இப்போதெல்லாம் பூச் செடிகட்கு நீர் பாய்ச்சுவது, மலர்களைக் கொய்வது, மாலை தொடுப்பது, பூஜையறையை மெழுகிக்கோலமிடுவது, 'நிவேதனத்திற்கு' (கடவுளுக்குப் படைத்தற்கு) உணவைச் சமைப்பது எல்லாம் அன்னையின் பணியாகிவிட்டன. பூஜையும் அவள் செய்ய வேண்டியதாயிற்று. எங்ஙனமாவது அவள் மைந்தன் நோயற்று உடல் நலனைப்பெற்ருல் போதும். அதையே வேண்டிப் பூஜையை அதிகப்பற்றுடன் புரிந்தாள்.

வேங்கடன் திருமாலின் திவ்விய (அழகிய) மூர்த்தியின் முன்பு உட்கார்ந்த வண்ணம் இருப்பான். அதையே உற்று நோக்குவான். சிற்சில நேரங்களில் அழுவான். அன்னை பிடிவாதம் செய்த பிறகு சிறிது உணவு வயிற்றிற்குள் செல்லும். குளிக்குமாறு அன்னை சொல்ல மறந்து விட்டால் அன்று நீராடுதலும் இருக்காது. திருமூர்த்தியைப் படுக்க வைத்த பின்பும் எதிரிலேயே இருப்பான். தூக்கம் கிடையாது.

திருவிழாக்கள் நடந்தன. அன்பர்கள் வந்த வண்ணம் இருந்தனர். செலவிற்கு வேண்டிய பொருள்கள் தாஞகவே அன்பர்களால் அளிக்கப்பட்டன. தாயின் உள்ளத்தில் அமைதி மட்டும் கிடையாது. இல்லத்திற்கும் வந்த சாதுக்களிடம் அவள் வணங்கி மைந்தன் வேங்கடன் நிலைமையைப் பற்றிக் கூறி அழுதாள். அவர்கள் 'உன் மைந்தன் நிலை மிகவும் உயர்ந்தது. ஒரு கோளாறும் இல்லை' என்று சொன்னபொழுது கிழவிக்கு எப்படிச் சினங்கொள்ளாதிருக்க முடியும்?

நாட்கள் செல்லச்செல்ல நிலைமை மிக மோசமாயிற்று. கைகளைப் பிடித்துச் சென்ருல் தான் எதையும் செய்யும் நிலைமை வந்து விட்டது. பாதி நீராடுகையிலோ, புசிக்கையிலோ, எழுந்து செல்லத் தொடங்கினுன். அல்லது மௌனமாகப் பல நாழிகை வீற்றிருக்கலானுன். எல்லாவற்றிற்கும் தாய் தூண்ட வேண்டியதாயிற்று. வைத்தியர்கள் நோயை அறிந்தாலல்லவா, மருந்து கொடுப்பர். அவர்கள் கைகளை விரித்தனர். கிழவி வருந்தினுள்.

3

"ஞானம் (எம்பிரானைப்பற்றிய உயர் அறிவு) இல்லாமல் மோக்ஷம் (வீடு) ஏது? வாதங்கட்குப்பிரதி வாதங்களை (பேச்சிற்கு விடைகளை)ச் சொல்லி விடலாம். ஆனுல் மறைகளின் உரைகளை ஏற்காதிருக்க எவனுக்குத் துணிவு உண்டு?" என்று கூறிய வண்ணம் ஓர் அறிஞர் எதிரிலுள்ள ஆசாரியரையும் மற்றவரையும் நோக்கிவிட்டுப் பின்புறம் திரும்பித் தம் மாணவர்களை நோக்கினுர். அவருடைய பார்வையில் 'இதற்கு யாதொரு விடையும் வராது' என்று இறுமாப்பு நிறைந்த எண்ணம் திகழ்ந்தது. சீடர்கள் தலைகளை அசைத்துத் தம் ஆதரவை அறிவித்தனர். பகவான் ஸ்ரீ ராமனுஜாசாரியரைப் போல் வேதங்களின் சொற்களில் நம்பிக்கை கொண்டவர் வேறு எவருமில்லை.

'சம்சாரச்சிறையில் அறியாமையினுல் மனிதன் அகப்பட்டுக் கொள்கிருனெனில், அறிவினுல் (ஞானம்) தான் அதினின்றும் விடுதலையைப் பெறமுடியும்?' என்ற வாதத்தை மாத்திரம் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'அறிவு என்பது ஓர் எண்ணமா? அல்லது ஓர் சொல்லா? இரண்டும் இல்லை. எந்தப் பரம் பொருளை வேதங்கள் "இஃதல்ல, அஃதல்ல" என்று மறைமுறையில் நிரூபிக்கின்றனவோ, அப்பொருளை எண்ணத்தால் எட்ட முடியாது. சொல்லினுலும் சுட்டிக் காட்ட முடியாது. அப்பொருள், குணமற்று உருவ

மற்றுளதென்றாலும் சரி; எல்லா குணங்களும் நிறைந்தது என்றாலும் சரி; அஃது பாற்கடலில் பள்ளிகொண்ட அறிவுக் களஞ்சியமான ஸ்ரீ ரங்கநாதனே தான். அவனுடைய திருவடிகளை அடைந்தாலன்றி நற்கதி கிடையாது மோக்ஷம் கிடையாது, என்றார் ஆசாரியார்.

அறிஞரால் ஆஸனத்தில் அமரமுடியவில்லை. மனம் கலக்கமடைந்தது. குரல் அமைதியை இழந்தது. 'அங்ஙனமாகில் கேட்டல், எண்ணுதல் முதலிய முறைகளினால் உள்ளத்தின் திரைகளை நீக்கியபின்பு கடவுளின் உணர்ச்சி உள்ளத்தில் ஏற்படும் என்பதும் பொய்யா? மகரிஷி பதஞ்சலி சொல்லிய நிர்விகல்ப சமாதி (உருவமற்று எங்கும் நிறைந்த பொருளை உணர்தல்) யின் மூலம் மோக்ஷம் ஏற்படும் என்பதும் பொய்யா?' என்றார் ஆத்திரங்கொண்ட அறிஞர்.

'குண முடையதும் குண மற்றதும், ஒரே பரம்பொருளின் இரு தோற்றங்கள். சேஷனலான படுக்கையில் பள்ளி கொண்டவராகவும் தென்படுவார் அவர். உள்ளங்களில் அறிவுச் சுடராகவும் தென்படுவார். பரம்பொருளில் இரண்டற்று ஒன்றாகக் கலத்தல் என்ற கைவல்யமும் திருமாலின் அருளால் ஸாயுஜ்யத்தைப் (திவ்விய மூர்த்தியில் ஒன்றுதலைப்) பெறுதலும் ஒன்றேயாம். இவ்வாராய்ச்சிகளில் மனதைச் செலுத்தாது இருந்தால்தான் இறைவனை அடையலாம் என்பதே பதஞ்சலியின் கொள்கை' என்று அமைதியுடன் ஆசாரியார் விடையளித்தார்.

'எவன் மனதினால் எண்ணாமல் இருக்கிறானோ, விரும்பாமல் இருக்கிறானோ, எவனுடைய உள்ளத்தில் பற்றில்லாமை தோன்றவில்லையோ, எவனுக்கு மோக்ஷம்பெறவேண்டுமென்ற எண்ணமே ஏற்பட வில்லையோ, அவனுக்குக் கூட மோக்ஷப்பேறு கிட்டும் என்பது உங்கள் எண்ணமா?' என்று அறிஞர் ஆரவாரித்தார்.

சூழ்ச்சியினாலாவது தாம் வென்றதாகக் காண்பிக்கலாம் என்பது அவருடைய எண்ணம். மாணவர்கட்கு எதிரில் இவ்விதம் தோல்வி ஏற்பட்டதைப்பற்றி அவர் கவலைகொண்டார். தம் மாணவர்களாவது தாம் கூறுவதைச் சரியென்று சொல்வது உறுதி என்று அவர் நம்பிக்கை கொண்டார்.

நீர் 'விரும்பாமல் தீயைத் தொடுகிறீர். உமக்குத் தெரியாத நிலையில் தீ கையில் படுகிறது. அப்பொழுது சூடு உமக்குத் தெரியாது போலும்? அப்படியா? நீர் சொல்வது சரியல்ல. பற்றில்லாமைஏற்பட்டதா, இல்லையா, என்ற வாதம் வேண்டாம். எப்பொழுது உள்ளே எம்பெருமானது அழகைப் பருகிய வண்ணம் இருப்பதனால் அன்பன் வெளியுலகிலுள்ள மாயைப் பொருள்களைக் காணாத நிலையில் இருக்கிறானோ; அப்பொழுது சாவு, அறியாமை, இவ்வுலக வாழ்வு, மாயை முதலியவை அவனிடம் எவ்விதம் அணுக முடியும்? தீ தானாகப் பட்டாலும் சுடுகிறதல்லவா? அதைப்போலவே அன்பன் மாயை நிறைந்த உலக வாழ்க்கையினின்றும் விடுபடவேண்டுமென்று எம்பிரானை வேண்டாமற் போனாலும், அறிவுச் சுடரான பெருமாள் உள்ளத்தில் தோன்றியவுடன் அறியாமைதானாகவே அழிந்து விடுகிறது. அவர் அன்பனைக்காத்து விடுகிறார்' என்று மெதுவாக ஆசாரியார் விவரித்தார்.

'ஆகா! நீர் கவியென்பது எனக்குத் தெரியாது. உவமை மிகவும் பொருத்தமாகத் தான் இருக்கிறது. ஆனால் இதுகாவ்யமல்ல. வேதாந்தத்தைப்பற்றிய வாதம் இது. இதில் உவமை பயன்படாது' என்றார் அறிஞர்.

'வேதாந்த சாஸ்திரங்களிலும் உவமை பிரமாணமாக ஏற்கப்பட்டிருக்கிறது. போகட்டும். நேரில் உமக்கு நம்பிக்கை ஏற்படவும் செய்கிறேன். கோதாவரிக்குச் செல்வதாக எண்ணம். கூட வருகிறீரா?' என்றார் ஆசாரியர்.

அறிஞர் தம்மைப் போலவே பிறரைக் கருதும் தன்மை பெற்றவர். ஆதலால் 'அங்கு சீமானான சீடன் இருக்கிறானா?' என்று கேட்டார்.

'கவலை வேண்டாம். வேங்கடனின் செல்வம் அளவிட முடியாதது' என்றார் ஆசாரியர்.

4

வேங்கடன் பேசுவதையும், பார்ப்பதையும், கேட்பதையும் ஒழித்தான். அவனுக்கு என்ன நோயோ? எவரும் அறிய முடியவில்லை. வைத்தியர்கள் கைகளை விரித்தனர். தாய் என்ன செய்வாள்? குழந்தாய்! வேங்கடா!! என்று அழுத வண்ணம் கிராமத்தில் திரிந்தாள்.

உட்காரச் செய்தால் பிறகு எழுந்திருப்பதில்லை. நின்றால் உட்காருவதில்லை. உண்பதில்லை. உறங்குவதில்லை. பல நாட்களாயினும் குளிப்பதில்லை. சில நேரம் காரணமில்லாத சிரிப்பு, சில நேரங்களில் அழுகை. இது தான் வேங்கடனின் நிலையாயிருந்தது.

கிராமத்து மக்களிற் சிலர் மந்திரங்களை ஓதினர். சிலர் திருநீற்றைத் தூவினர். கூட்டம் வந்த வண்ணம் இருந்தது. கிழவிக்கு ஆறுதல் மொழிகளைக் கூறிற்று. நாட்கள் செல்லச்செல்லக் கூட்டம் குறைந்தது. ஏனையோரும் 'தீராத பைத்தியம்' எனத் தீர்மானித்தனர். குடிசையில் கிழவி வேங்கடன் இருவரைத் தவிர வேறு எவரும் இல்லை.

'இரு நாட்களாகத் திருமாலின்மூர்த்திக்கு நீராட்டவில்லை' என்பது கிழவியின் நினைவிற்கு வந்தது. பூச்செடிகளும் துளசிச் செடிகளும் நீர் பாய்ச்சாமல் வாடின. வாடிய சில மலர்களைக் கொண்டு பூஜைநடந்தது. ஆரதியும் ஆயிற்று. துக்க மேலீட்டினால் தரையில் உணர்விழந்து விழுந்து கிடந்தாள் கிழவி.

தானாக உணர்வு பெற்றாள் அன்னை. செவிகளில் திருமாலின் திருநாமங்கள் விழத் தொடங்கின. குதல் பழகியதாகத் தெரிந்தது. விரைவில் எழுந்து வாயிலுக்கு ஓடினாள். என்ன விந்தை? ஜகத்குரு ஸ்ரீ ராமானுஜாசாரியர் தம் திருக்கூட்டத்துடன் வாயிலில் நிற்பதைக் கண்டாள். அன்னையின் வேண்டுகோளிற்கிரங்கித் திருமாலே நேரில் வந்துவிட்டார் என்று அன்னை எண்ணினாள்.

அழுகையினாலும் கண்ணீராலும் ஆசாரியரை அம்முதுமைக் கிழவி வரவேற்றாள்.

'வேங்கடன் எங்கே?' என்று வினவினார் ஆசாரியர். கூட விருந்த அறிஞரும் மற்றைய சீடரும் 'இந்தக் குடிசையில் இன்று நமக்கு என்ன கிடைக்கப் போகிறது? இன்று உபவாஸம் தான்' என்று எண்ணித் தயங்கினர்.

'வேங்கடன்' என்ற பெயரைக் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டனர். இவனது விருந்தை ஏற்கவோ ஆசாரியர் இங்கு வந்தார்?' என்று அவர்கள் வியந்தனர். வேங்கடனின் பாக்கியத்தில் அவர்கள் பொறாமை கொண்டனர்.

'அவன் பித்தனாகி விட்டான் பிரபுவே! நீங்கள் தான் அவனுக்கு நல்லறிவு வரச் செய்ய வேண்டும்!' என்று சொல்லிக் கொண்டே குடிசையின் உட்புறத்தைக் காண்பித்தாள் வேங்கடனின் அன்னை.

அறிஞரும் பின் தொடர ஆசாரியர் உள்ளே சென்றார்.

'அறிஞரே! இந்த அந்தணனது தலையில் தம் திருக்கரங்களை வைத்து அருள் புரியும்' என்றார் ஆசாரியர்.

'நான் இதற்கு ஏற்றவனல்லவே? அவ்வளவு பெருமை எனக்கு ஏது?' என்றார் பணிவுள்ள அறிஞர்.

'நீர் இவ்வந்தணனுக்கு அருள் புரிந்து தான் ஆகவேண்டும்' என்று உத்திரவிடும் தொனியில் ஆசாரியர் ஏவினார்.

ஒரு மாதிரி அறிஞர் வேங்கடனின் சிரத்தில் கரங்களை வைத்தார். எவரோ பிடித்துத் தள்ளியதைப்போல் 'தடால்' எனத்தரையில் விழுந்தார். விக்கி விக்கி அழுதவண்ணம் ஆசாரியரின் திருவடிகளில் தலையை வைத்துக்கொண்டே இருந்தார் அறிஞர். அவர் விழிகள் மேலே சொருகிப்போயின. வாயினின்றும் ஒலி கிளம்பவில்லை. பூமியில் புரண்டார்.

அறிஞரின் சீடர்கட்கு ஒன்றும் விளங்கவில்லை. எதற்கும் அஞ்சாத உள்ளம் படைத்த குருநாதன் என் குழந்தையைப் போல் அழுது புரளுகிறார் என்பது விந்தையாகவிருந்தது.

கிழவி கற்சிலையைப் போல் ஒரு மூலையில் சிதைந்து போனாள். தன் மைந்தனைத் தொட்ட மாத்திரத்தில் உயர்ந்த பெருமை வாய்ந்த அறிஞருக்குப் பித்தம் பிடித்து விட்டதென்றால் அவள் மகன் வேங்கடன் சுயநிலை பெறுவான் என்று அவள் எவ்விதம் நம்பக்கூடும்? நம்பிக்கையை இழந்த அவளுடைய விழிகள் தரையை நோக்கின.

'வேங்கடா!' என்று அமைதியும் அன்பும் பெருகும் குரலில் ஆசாரியர் அழைத்தார். விழிகள் திறந்தன. புதிய இடத்தை நோக்குவதைப் போல் அவை எல்லா மூலைகளிலும் பதிந்தன. மறுபடியும் ஆசாரியர் மேல் பதிந்தன. உடனே வேங்கடன் ஆசாரியரின் திருவடிகளில் தலையை வைத்து வணங்கினான்.

'வேங்கடா! என் குழந்தாய்' என்று கூவிக்கொண்டே ஆசாரியர் வேங்கடனை எழுப்பினார். மார்புடன் தழுவினார். கண்களில் நீர் ததும்பிற்று. அவர் சொல்லில் ததும்பிய அன்புப் பெருக்கை வேறெவரிடமும் கண்டிருக்கமுடியாது. கிழவியின் மகிழ்ச்சி எல்லையைக் கடந்து விட்டது. அதே நிலையில் ஆசாரியர் வெகுநேரம் இருந்து விட்டார்.

'வேங்கடா! நீ ஸ்ரீ ரங்கநாதனின் திருவடிகளின் உள்ளத்தை ஒருமையுடன் செலுத்தி, அவருடன் இரண்டறக்கலந்து, உன் செயல்களை அவரிடம் ஒப்புவித்து, உன் வாழ்நாட்களின் தீயசெயல்களின் கொடிய பலன்களி

னின்றும் முற்றிலும் தப்பித்துக்கொண்டாய், என்று வேங்கடனிடம் ஆசாரியர் கூறினர்.

கிராமத்து மக்களின் உதவியினல், சீமான்கள் கூட நடத்த முடியாத விருந்து நடைபெற்றது.

எல்லோரும் கூடியிருக்கையில் தம் அடிகளின் கீழ் அமர்ந்துள்ள வேங்கடனிடம் 'குழந்தாய்! அறிவினல், பிறவி சாவு நிறைந்த சம்சாரச் சிறையினின்றும் விடுபடு வதைப்பற்றி அறிஞர் நன்கு உனக்கு உபதேசம் செய்வார்' என்று ஆசாரியர் சொன்னர்.

அறிஞர் எழுந்து ஆசாரியரின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டார்.

'ஸ்வாமீ! இந்தக் கடையோன் மீது, இறுமாப்புக்கொண்டவன் மீது, அருட்பார்வையைச் செலுத்துங்கள்- என் குறைகளைப் பொறுத்தருளுங்கள். எவனுடைய கை என் மேல் பட்ட மாத்திரத்தில் எனக்கு மோக்ஷத்தின் பாதை தென்பட்டுவிட்டதோ, அந்த வேங்கடனுக்கா நான் உபதேசம் செய்வது? ஸ்ரீ ரங்கநாதன் மீது எவன் உள்ளம் பதிந்துவிட்டதோ, அவனே தான் மோக்ஷம் பெற்றவன். இன்று தான் இதை நான் அறிந்தேன். என்னைக் கரையேற்றுங்கள்' என்ருர் அறிஞர்.

'மிகவும் கொடிய நடையோனுயினும் வேறொன்றை வணங்காது என்னை வணங்குவோன் நல்லோன் என்றே கருதுக; ஏனெனில் அவனிடம் நன்முயற்சியுள்ளது, ஆதலின் அன்னவன் விரைவிலே தருமவானுவான், நித்திய சாந்தியும் அடைவான்.........
பாவிகள் என்னைப் பணிவாராயினும்.........
பரகதி பெறுவர்'—கீதை, 9—30,31,32

செய்தி

ஸ்ரீ ஸாரதா தேவியாரது பிறந்தநாள் விழா

ஸ்ரீ ஸாரதாமணி தேவியாரது ('தூய அம்மையா'ரது) 98-வது திதி பூஜை 1950-ம் ஆண்டு டிசம்பர், 31-ம் தேதியன்று மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலையில் பஜனை, பூஜை, ஹோமம் முறையாக நடந்ததுமன்றி, அவ்வமயம் கூடியிருந்த அன்பர்கட்குப் பிரசாதமும் வழங்கப்பட்டது.

பொதுக் கொண்டாட்டத்தை இவ்வாண்டு ஜனவரி 7-ம் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6-30 மணிவரை சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாள் முதலான செயலாளர் மூவர் சிறப்பாக நிறைவேற்றினர். அகில இந்திய மாதர் சங்கநாட்டின் கௌரவ காரியதரிசியான ஸ்ரீமதி ரக்ஷாசரண அம்மையார் தலைமை வகித்தனர். ஆரம்பத்தில் தோத்திரப் பாக்களைப் பாடசாலை மாணவிகள் பாடினர். பின் ஸ்ரீமதி சரஸ்வதிபாய் அம்மையார் தமிழில் ஸ்ரீ ஸாரதா தேவியாரது சரித்திரத்தைக் கதா காலக்ஷேப முறையிலே இடையிடையே ஏற்றபாடல்களைப்பாடிப்பிரசாங்கஞ் செய்தனர். பின்னர் ஸ்ரீ ஸாரதா வித்யாலய மாணவிகள் சிலர் தெலுங்கிலே சம்பாஷணை ரூபமாகத் தேவியாரது சரித்திரத்தைப் பாட்டுக்களோடு கலந்து கூறினர். இன்னொரு தமிழ்ப் பிரசங்கமும் சுருங்கிய அளவில் நிகழ்ந்தபின், பேச்சுப் போட்டியிலே பரிசு பெற்ற பெண்கள் தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் வடமொழியிலும் சில பகுதிகளை ஒப்பித்துவிட்டுத் தலைவியாரிடமிருந்து பரிசுகள் பெற்றனர். பின் சில மாணவிகள் 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகத்தைக் கும்மியாகப் பாடினர். இறுதியில் தலைவியார் ஸாரதாதேவியாரின் வைபவத்தைப்பற்றியும் பரதமா நாட்டிற்கு ஞான வாழ்வே உயிர் நிலையாயிருப்பதைப் பற்றியும் இனிய சொற்பொழிவாற்றினர். நன்றி கூறுதலோடும் தேசீய கீதத்தோடும் மணி 6-30க்கு விழா இனிது முடிந்தது.

ஸ்ரீ சுவாமி யதீஸ்வராநந்தரும் ஸ்ரீ சுவாமி அகிலாநந்தரும்

சென்னை மடத்திற்கு முன்பு தலைவராயிருந்த ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரானந்தர் ஜனவரி 7ம் தேதி மாலையிலும், அமெரிக்காவில் பிராவிடென்ஸ் நகரத்தில் இருபது ஆண்டுகட்கு மேற்பட்டு வேதாந்த போதகராயிருப்பவரும் முன்பு 1920 முதல் 1925 வரை சென்னை மடத்தில் இருந்தவருமான ஸ்ரீமத் சுவாமி அகிலாநந்தர் 8-ம்தேதி மாலையிலும் சென்னைக்கு விஜயம் செய்தனர். பழைய நண்பர்கள் பலர் இரு சுவாமிகளையும் மடத்திற் கண்டு பேசி மகிழ்ந்தனர். ஸ்ரீ சுவாமி அகிலாநந்தர் 9-ம் தேதியன்று மாலை சென்னைத் தத்துவநூலறிஞர் சங்க ஆதரவிற் கூடிய கூட்டத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். 10-ம் தேதி காலையில் விவேகானந்தர் கல்லூரியையும், மாலையில் தியாகராயநகர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பள்ளிக் கூடத்தையும் பார்

வையிட்டு, ஒவ்வோர் இடத்தும் இனிய பிரசங்கங்களைச் செய்து, மாணவரையும் ஆசிரியரையும் மகிழ்வித்தனர். அன்றிரவே வட நாட்டுக்குப் பிரயாணம் செய்தனர்.

மதிப்புரை

திருவாசகம்—நீத்தல் விண்ணப்பம் கதிர்மணி விளக்கம் எனும் பேருரையுடன். ஆசிரியர்: மஹாமஹோபாத்யாய, முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார். கிடைக்கும் இடம்: செட்டிநாடு அச்சகம், காரைக்குடி. விலை: ரூ 2-12-0.

திருவாசகமாம் தமிழ் மறைக்கு விரிவுரை எழுத முற்படுவார்க்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாய, ஆழ்ந்து பரந்த செந்தமிழ்ப்புலமையும், மதிநுட்பமும், ஆராய்ச்சி வளமும், உலகியலறிவும், சித்தாந்த ஞானமும், கேட்பாரைப் பிணிக்கும் சொல்வன்மையும், சிவநேசமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பண்டித மணி அவர்கள், அருளையும் பொருளையும் துணைக்கொண்டு, தாம் தொடங்கிய மாபணியைச் சோர்வின்றித் தொடர்ந்தியற்றிவருவது தமிழ்நாட்டின் தவப்பயனே யாகும். இருமொழிக்கும் முதற்குரவரான பெருமானையே பொருளாகக் குறித்தெழுந்த திருவாசகத்திற்கு உரைகாண வந்த அன்னார்பால் இருமொழிப்புலமையும் இணைந்து நின்ற எழிலும் ஏற்புடையதாயிற்று. திருப்பாடல் ஒவ்வொன்றினையும், மொழி மொழியாகவும், பகுதி பகுதியாகவும், முழுமையாகவும் சிந்தனையால் துருவித்துருவி யாராய்ந்து, அதன்கண் மல்கியுள்ள சொற்சுவை பொருட்சுவை மெய்யன்பின் அனுபவச் சுவைகளை ஆசிரியர் திரட்டிக் கொட்டுதலானே, இவ்விரிவுரை சுவைப் பெருக்கே யாயிற்று. பலரும் பொதுப்பட உரைக்கும் பண்பிலாப் பொருளினை மேவாது, நூலின் மதிப்புக்கேற்பச் சிறப்புப் பொருள்களைக் கூர்த்த மதியால் ஆய்ந்து கூறி, வேண்டுங்கால் தக்க மேற்கோளையும் காட்டித் தாம் கொண்ட முடிபுகளை நிறுவும் ஆசிரியரது திறன் போற்றற்குரியதாகும். இசை மல்கிய பண்டைய உரையாசிரியர்களின் நயங்களெல்லாம் இந்நூலின்கண் ஆங்காங்கே மிளிர்ந்து, கற்றார்க்கும் கற்கும் விருப்பினர்க்கும் இன்பம் பயக்கின்றன.

இவ்விரிவுரையின் சீர்மையினைப் புலப்படுத்தற் பொருட்டும், தமிழன்பர்கட்கு இந்நூலைக் கற்கும் விழைவுகூர்தற் பொருட்டும், சிற்சில எடுத்துக் காட்டுகளை மட்டும் பின்னே தருவாம். பொருட் சிறப்பினை நோக்கி ஒரே வழி ஒரு சொல்லின் உருபினைப் பிரித்துப் பிறிதொரு சொல்லொடு கூட்டும் முறை ஆன்றோரால் கையாளப்பட்ட தொன்றேயாம்; இது 'உள்ளனவே நிற்க இல்லன செய்யும்' என்னும் இடத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'தொடற்கரியாய், சுடர் மாமணியே' 'அலிப் பெற்றியனே' என்னும் இடங்களிலும், ஐவாய்ப் பிறவி அரவத்திற்கு மனமாம் சந்திரன் பகைப்பொருளாயிற்று என்னும் இடத்தும், வடமொழிப் புலமை எத்துணைப் பயனை நல்குகின்றது என்பது விளங்குகின்றது. இறைவனையும் ஊரையும் வருணிக்கும் பகுதிகளில் அமைந்துள்ள குறிப்புப்பொருள்களை நயம் படவும், சந்தர்ப்பத்திற் கேற்பவும் விளக்கும் பெருமைக்கு 'வியன் மூவுலகுக்கு ஒரு தலைவா, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே, பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே' என்பதன் விரிவுரை சான்றாகின்றது. 'நுண் மாண் நுழைபுலத்'தானே மொழிகளை ஆராயும் திறன் 'இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு' என்பதற்கும், 'பொதும்புறு தீப்போற் புகைந்தெரியப் புலன்தீக் கதுவ' என்பதற்கும் அளித்துள்ள உரைப்பகுதியிலே இனிது புலனாகின்றது. இயன்ற இடத்தெல்லாம் பலப்பல சித்தாந்த ஞானக் கருத்துக்களை உள்ளுறைப் பொருள் வாயிலாகத் தெரிவிக்கும் சீர்மையை 'மந்தாரத்தில் தாரம் பயின்று மந்தம் முரல்வண்டு அதும்பும் கொழுந்தேன்' என்ற விடத்தும், 'இருளே வெளியே' என்ற விடத்தும், 'அம்பரமே நிலனே அனல் காலொடப் பானவனே' என்ற விடத்தும் தரும் உரையிலே கண்டு களிப்பர் சித்தாந்தச் செல்வர். ஞான சாதகர்க்கு இன்றியமையாத அனுபவக் கருத்துக்களை அலசியெடுத்து அறிவுறுக்கும் பான்மைக்கு 'உன் கழல் கண்டும் கலந்தருள வெளிவந்திலேனை' என்னுமிடத்தும், 'மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே' என்னுமிடத்தும் காணப்படும் செவ்விய உரைகளே சாலுங் கரியாகும். இன்னும், போதிய இலக்கணக் குறிப்புகளும், ஒல்லும் வாயெல்லாம் ஒன்றுக்குமேற்பட்ட பொருள்கள் கூறும் முயற்சியும், பாட்டுக்களின் கருத்துத் தொடர்பின் விளக்கமும், பிறவும் உரைக்கு அணி செய்கின்றன.

(தொடர்ச்சியை 17-ம் பக்கம் காண்க)